Registered as a news paper. பக்கங்கள் பன்னிரண்டு +II விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்) 021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 தை – 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1423 முஹர்ரம் 02 (12.02.2005) சனிக்கிழமை இதழ்: 135

## குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் படுகொலையைக் கண்டித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வு கழகத்தின் ஏற்பாட்டில் இன்று யாழ். குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வீதிகள், பொதுஇடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் கறுப்பு கொடிகளை பறக்க விட்டும் சோககீதங்களை இசைத்தும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனை மட்டக்களப்பில் யசூசி அகாஷி இன்று சந்திப்பார்!

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி இன்று மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலையில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இன்று காலை 11 மணியளவில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பு, கிளிநொச்சியில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளின் இறுதி நிகழ்வில் பங்கேற்பதற்காக சென்ற அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மட்டக்களப்பில் தங்கியிருப்பதால் அங்கேயே அவரைச் சந்திக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் - சுனாமி நிவாரணப் பணிகள் மற்றும் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான உதவிப் பணிகள், தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்பதற்காக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் நேற்று மாலை தரைவழியாக மட்டக்களப்பை சென்றடைந்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெலிக்கந்த படுகொலைகளுக்கு ராணுவத்தின் ஒரு பிரிவே காரணம்!

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு இராணுவத்தில் இயங்கும் ஒரு இனந்தெரியாத குழுவே காரணம்.**

**அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் தொடர்ந்து நடைபெறும் இத்தகைய படுகொலைகளைக் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் அதுசமாதான முயற்சிகளுக்கு பேராபத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் படுகொலைகளை, கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் அரசாங்கம் தடுத்துநிறுத்த வேண்டும். இதற்கான உறுதியான நடவடிக்கையை அது எடுக்கவேண்டும். அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்கனவே (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு - அம்பாறை அரசியற்துறைக்கு பொறுப்பாளராக மார்ஷல் நியமனம்!

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்துக்கான புதிய அரசியற்துறைப் பொறுப்பாளராக மார்ஷல் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வெலிக்கந்த தாக்குதலில் லெப்.கேணல் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டதை அடுத்தே, அவருக்குப் பதிலாக மார்ஷல் இந்தப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட மாவீரர்களின் இறுதி நிகழ்வு தாண்டியடியில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பின்னர், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இந்த முடிவு (12 ஆம் பக்கம் பார்க்க)

- பொலிஸாரால் மாணவன் சித்திரவதை -

## ஆத்திரம் கொண்ட பொதுமக்கள்

ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

டில் அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் படுகொலைகளை, கண்காணிப்புக்

தடுத்துநிறுத்த வேண்டும். இதற்கான உறுதியான நடவடிக்கையை அது எடுக்கவேண்டும். அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்கனவே

(12 ஆம் பக்கம் பார்க்க)

பெற்ற விசேட கூட்டத்திலேயே இந்த முடிவு (12 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் போரை ஆரம்பிக்கவே அவசரகாலச்சட்டம் பிரகடனம்!

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மக்களுக்கு எதிரான யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆயத்த நடவடிக்கையாகவே, ஜனாதிபதி சந்திரிகா அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று நாடாளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அரசியல், பொருளாதார நெருக்கடிகளால் விழுங்கப்பட்டுள்ள அரசு, அதிலிருந்து மீள்வதற்கு இன்று யுத்தத்தை ஒரே வழியாகத் தேர்ந்தெடுத்துள்ளது. அது தற்போது அமுல்படுத்தத் துடிக்கும் அவசர காலச் சட்டமானது தென்னிலங்கைக்கு அல்ல. தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குக்கே ஆகும். கடந்த காலத்தில் தமிழ்மக்களை அழித்தொழிக்கப் பயன்படுத்திய சட்டமே இதுவாகும்.

உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பாரிய நிதியுதவியை எப்படியாவது பெற்றுக்கொள்வதற்கு அரசு சமாதான முயற்சிகள் என்று கூறிக்கொண்டு, சர்வதேச சமூகத்தின் முன்னால் மாயவலையை விரித்து மர்ம நாடகம் ஆடியது.

ஆனால், சுனாமி அனர்த்தத்தை அடுத்து வெளிநாட்டு உதவிகள் எதிர்பாராதவாறு அள்ளுகொள்ளையாகக் கிடைத்துவிட்டது. ஆட்சியைக் கொண்டுநடத்துவதற்குப் போதுமான நிதி அரசுக்கு வந்துவிட்டது. ஆகவே, தற்போது யுத்தத்தை ஆரம்பிக்க அது தயாராகிவிட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கிடைத்த நிதியில் அரசு முதன்முதலில் செய்த காரியம் தனது இராணுவ உயர்மட்டத்தினரை ஈரானுக்கு அனுப்பி ஆயுதங்கள் வாங்கியதுதான். தற்போ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## - பொலிஸாரால் மாணவன் சித்திரவதை -

# ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் பொலிஸ் நிலையம் முன் ஆர்ப்பாட்டம்!

(மன்னார்)

மன்னார் - தாழ்வுபாடு கிராமத்தில் இளைஞன் ஒருவரைக் கைது செய்த பொலிஸார் அவரை மிக மோசமாக சித்திரவதை செய்ததை அடுத்து ஆத்திரம் கொண்ட மக்கள் தாழ்வுபாடு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பொலிஸ் நிலையத்தின் முன்பாக ரயர்களைப் போட்டு எரித்தனர்.

இந்த சம்பவம் நேற்று இடம் பெற்றது.

யாழ் மாவட்டத்தை சொந்த இடமாகவும் தாழ்வுப்பாட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஜீவரட்ணம் யூலியஸ் (வயது 19) என்பவரே பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்டவராவார். இவர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ராஜபக்ஷவுடன் யசூசி அகாஷி சந்திப்பு!

(கொழும்பு)

சுனாமி கடல் பேரலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாணப் பணிகளை அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து மேற்கொள்வதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாஷியிடம் தெரிவித்தார்.

சுனாமி கடல் பேரலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராயும் நோக்குடன், ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்றுமுன்தினம் இலங்கை வந்திருந்தார்.

இலங்கையில் சுனாமி கடல்

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு யாழ்.பொது அமைப்புக்கள் அழைப்பு!

**விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு யாழ். குடாநாட்டில் பொது அமைப்புக்கள் ஆதரவு வழங்கியுள்ளன.**

**மேறபடி படுகொலைச்சம்பவத்தைக் கண்டித்து இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து பொது அமைப்புக்கள் அனுப்பிவைத்த அறிக்கைகள் வருமாறு -**

### நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் படுகொலையை அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும்.

இரு இராணுவ முகாம்களுக்கிடையில் இடம்பெற்றிருக்கும் இந்தக் கொலையை அரசு தனக்குத் தெரியாது எனக்கூறித் தட்டிக்கழித்துவிட முடியாது. கருணா என்ற கருநாகத்தின் துரோகத்தனத்திற்கு அரசு துணைபோயுள்ளது. கருணா குழுவை மறைத்து வைத்து அவர்களின் சதித்திட்டங்களுக்கு அரசு துணை போகிறது என்பதே உண்மை.

ஈழத் தமிழினம் இன்று மிக நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்கின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணம் எதிர்நோக்கும் ஆபத்துக்களை அளவிடமுடியாது.

இத்தகைய நெருக்கடியான சூழலில் கருணா என்ற கருநாகத்தின் துரோகத்தை அடுத்து உருவாகிய மிகச் சிக்கலான சூழ்நிலையில், கிழக்கு மாகாணத்தைக் கட்டிக் காத்த பெருமை எம் இளம் தலைவன் கௌசல்யனையே சாரும். தன்னுயிருக்கு எந்த நிலையிலும் ஆபத்து ஏற்படுமென நன்குணர்ந்த நிலையிலும், தன்னுயிரைத்துச்சமென மதித்துத் துடிப்புடன் அவர் ஆற்றிய பணியை நாம் எந்த நிலையிலும் மறக்கமுடியாதுள்ளது.

இந்தப் படுகொலையைக் கண்டித்து இன்று தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் ஏற்பாடுசெய்திருக்கும் ஹர்த்தாலை அனைத்து தமிழ் மக்களும் அனுஷ்டிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியம்

சுனாமி அனர்த்தத்தின் பின்பு மக்கள் தங்களது இயல்பு வாழ்க்கையை நடத்துவதற்கு இன்னற்பட்டுகொண்டிருக்கும் இவ்வேளையில் - அவர்களின் இயல்புவாழ்க்கையைச் சீர்செய்வதற்கும், அவர்களுக்கான உதவிகளை திறம்பட மேற்கொள்வதற்குமான திட்டங்கள் பற்றிக் கலந்தாலோசித்துவிட்டு திரும்பிய வேளையில் -

மட்டு - அம்பாறை அரசியற்துறைப்பொறுப்பாளர் கொளசல்யன் உட்பட்ட போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் மீது படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைகள், சமூக விரோதக் கும்பல்களையும், அவற்றின் பெயர்களையும் பயன்படுத்தி இப்பாரிய படுகொலை மேற்கொள்ளப்பட்டதை யாழ்.உயர்தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இன்று அனுஷ்டிக்கப்படும் பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுள்ளது.

### யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு நிலையைச் சிதைப்பதில் இலங்கை அரசு முனைப்போடு செயற்பட்டுவருகிறது. இதற்குத் தளமாக கிழக்கு மாகாணத்தைப் பயன்படுத்திவருகிறது. அங்கு தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் படுகொலைகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

தமிழ்த் தேசியப் பற்றுள்ளவர்கள், விடுதலைப் புலிப் போராளிகள் தொடர்ந்தும் படுகொலைசெய்யப்பட்டுவருவதால், சமாதானம் கேள்விக்குறியாக மாறிவருகிறது. சமாதான முயற்சிகளுக்குத் தடைபோட்டுவந்த அரசு, சுனாமி பேரனர்த்ததால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பத் தடைகளைப் போட்டு வருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்ப முனையும் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் நோக்கோடு, மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் கொல்லப்பட்டுள்ளார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இது தொடர்பாக இன்று யாழ். குடாநாடு தழுவிய பூரண கதவடைப்பையும், துக்கதினத்தையும் அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு விடுத்துள்ளதற்கு, யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆதரவு தெரிவிக்கிறது.

இராணுவத்தினரின் திட்டமிட்ட சதியால் போராளிகள் கொல்லப்பட்டதைக் கண்டித்து இன்று நடைபெறும் பூரண ஹர்த்தாலுக்கு குடாநாட்டு மக்களை ஆதரவு வழங்குமாறு வேண்டுகின்றோம்.

அதேவேளை அனைத்து அரச, கூட்டுறவு, தனியார்துறை, கல்விக்கூடங்கள், போக்குவரத்துச் சேவை என்பவற்றின் பணியாளர்கள் கடமைக்குச் செல்லாமலும், அலுவலகங்களைப் பூட்டியும் இந்தக் ஹர்த்தாலூடாக எமது ஆட்சேபத்தை இலங்கை அரசுக்குத் தெரிவிப்போம்.

எனவே, அனைத்துத் தரப்பினர்களும் இன்றைய ஹர்த்தால் வெற்றிபெறப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கிறது.

### தமிழ் மாணவர் ஒன்றியம்

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணா என்கின்ற ஒருவரின் பெயரினைப் பயன்படுத்தி - அரசும், அதன் படைகளும் நிகழ்த்திமுடித்த அராஜகச் செயல் மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட கடலனர்த்தம் சம்பந்தமான கூட்டத்தை முடித்துக் கொண்டு - லெப்.கேணல் கௌசல்யன் உட்பட்ட நான்கு போராளிகளும், நாட்டுப்பற்றாளர் சந்திரநேருவும் மட்டக்களப்புக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்பொழுது, சீருடையினரால் வழிமறிக்கப்பட்டு, நிராயுதபாணிகளாக இருந்தவர்களைச் சுட்டுக்கொலை புரிந்தமை அரசின் சினனத்தனத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

இனவெறியுடன் தமிழரை அழிக்கும் நோக்குடன் காலம் காலமாக தமிழ் மக்கள் மீது காட்டிவரும் அராஜகத்தனத்தின் கரங்கள் அகலவிரிக்கப்பட்டு, தமிழ்மக்கள் பல்வேறு ரீதியில் அடக்கப்பட்டுவரும் கிழக்கு மாகாணத்தில், மறப் புலியாக நின்று தமிழ்மக்களின் உரிமைக் கோசத்தையும், அடக்குமுறைக்கு எதிராகவும் குரல்கொடுத்த கௌசல்யனை இன்று இராணுவ இயந்திரங்கள் அழித்திருக்கின்றன.

கடந்த காலங்களில் கருணா என்கின்ற கருநாகம் படமெடுத்தாடிய பொழுது உடனடியாக கருணாவின் தேசவிரோதப் போக்கினைத் தலைமைப்பீடத்துக்கு எடுத்தியம்பி கருணாவின் துரோகத்தனத்தில் இருந்து மக்களை மீட்டெடுப்பதில் பெரும் பங்காற்றியவர்.

துரத்தப்பட்ட கருணாவின் பெயரில் இயங்கும் ஆயுதப்படைகளின் அட்டகாசங்களுக்கும், அதனால் ஏறபடுத்தப்படும் அடக்குமுறைகளுக்கும் எதிராக அச்சுறுத்தல்களின் மத்தியில் அஞ்சாத நெஞ்சனாய் அரசியல் நடத்தியவர்.

இவர்களைப் படுகொலை செய்த பொறுப்பினை அரசாங்கம் ஏற்கவேண்டும். புலிகளின் தளபதிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லும்பொழுது இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படுமென்றும், அரசியல் போராளிகள் அருகில் உள்ள காவலரணில் பதிவுசெய்த பின் செல்லுதல் வேண்டும் என்பது தான் புரிந்துணர்வு ஒப்பந்த நடைமுறை.

அதன் அடிப்படையிலேயே கௌசல்யன் தலைமையிலான போராளிகள் பயணித்தபோது படைமுகாமுக்கு அருகில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கூறி புலிகளின் கைகளைக் கட்டிவிட்டோம் என்ற எண்ணத்தில் இராணுவம் நடக்கும் விதம் தமிழ் மக்களின் பொறுமைக்குச் சோதனையாக உள்ளது. அரசின் கபட எண்ணத்தினால பலிக்கடாக்கள் ஆகுவதை தமிழ்மக்கள் தொடர்ந்தும் அனுமதிக்கப் போவதில்லை.

அரசின் அராஜகத்தை உலகுக்கு எடுத்தியம்பும் நோக்குடன் இன்று கடைகளைப் பூட்டி, கல்வி, தொழிற்பணிகளை இடைநிறுத்தி கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு, சோககீதங்களை ஒலிபரப்பியும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தக நிலையங்களை மூடுமாறு யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், உள்ளிட்ட நான்கு போராளிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து இன்று யாழ். குடாநாட்டில் நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு அதரவு தெரிவித்து வர்த்தக நிலையங்களை மூடுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தால் இன்று ஹர்த்தாலும், துக்கதினமும் அனுஷ்டிக்க வேண்டுமென விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் வர்த்தக நிலையங்களைமூடி, கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு இந்தத் தினத்தை துக்கதினமாக அனுஷ்டித்து ஆதரவு வழங்குமாறு கேட்டுள்ளது.

## ஆசிரியர் பலமாகத் தாக்கியதில் மாணவன் வைத்தியசாலையில்!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் - முகத்தில் பலமாகத் தாக்கியதில் கண்பகுதியில் உட்காயமடைந்த மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. சம்பவத்தில் 2005 ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்விகற்கும் மாணவனே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காலை பாடசாலைக்கு வருகை தந்த மாணவன் வெளிக் கற்றல் செயற்பாடு காரணமாக மோட்டார் சைக்கிள் ஒன்றில் நின்றசமயமே பின்புறமாக வந்த உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர் பலமாகத் தாக்கியதாக காயமடைந்த மாணவன் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### நூல் வெளியீடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஹரி கஸ்பரோவ் சதுரங்க அக்கடமி இன்று நடத்தவிருந்த சி. வித்தியானந்தனின் 'சதுரங்கத்தில் இறுதியாட்டம்' நூல் வெளியீடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அக்கடமியின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

### தலைமைத்துவப் பயிற்சி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவர் பேரவையின் யாழ்.பிராந்திய நிலையத்தில் இன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தலைமைத்துவப் பயிற்சிநெறி தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை காலை 8.30 மணிக்கு இந்தப் பயிற்சி நெறியானது நடைபெறும். எனவே சகல மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். பிராந்திய இயக்குனர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார்.

## புலிகள் மீதான தாக்குதல்

# தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தும் நிலையை மீண்டும் உருவாக்கும்

## மகளிர் அமைப்புகள் கண்காணிப்பு குழுவுக்கு கடிதம்

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கின்றபோது, இராணுவப் பாதுகாப்பு பிரதேசத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை - அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலாகும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அமைப்பு - கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமாலை கிளிநொச்சி மாவட்ட கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்த நிகழ்வு எமது மக்களை துனபத்திலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. விலைமதிக்க முடியாத இந்த இழப்பிற்கு அரசாங்கம் எந்தக் காரணங்களையும் நியாயம் கற்பிக்க முடியாது.

தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்து அரசியற் பணிபுரிந்துவரும் விடுதலைப் புலிப்போராளிகளுக்கும், மக்களுக்கும் இனி, எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பதை இந்தப் படுகொலைமூலம் மீண்டும் ஒருமுறை அரசு நிரூபித்துள்ளது.

இவ்வாறான கோர நிகழ்வுகளை இனியும் எம்மால் பொறுக்க முடியாது. புரிந்துணர்வு உடன்படிக்கை காலத்தில் நாம் - பெரும் தளபதியை இழந்து நிற்கின்றோம். எனவே, நோர்வே அரசாங்கம் இதற்குப் பதில் சொல்லவேண்டும்.

தொடர்ந்தும் எம்மால் பொறுமை காக்க முடியாது. பொறுமைகாக்கும் எல்லையைக் கடந்து விட்டோம்.

எனவே, தமிழ் மக்களாகிய நாம் மீண்டும் ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதற்குக் காரணம், எதிரியானவன் பலமுறை எம்மைச் சீண்டி வருகிறான். மானிப்பாயில் பெண் போராளிகளின் இடுப்புப் பட்டியைக் கழற்றி மிதித்தார்கள். இதையும், பொறுத்தோம். இனியும் பொறுமைக்கு இடமில்லை என்பதை மகளிர் அமைப்பான நாம் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, வட்டு மேற்கு, வட்டு. சித்தங்கேணி வீதியில் (அத்தியடி பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) 7 1/2 பரப்பு காணியில் 3 அறைகளுடன் சகல வசதிகளுமுடைய LUXURY HOUSE விற்பனைக்குண்டு. தொடர்பு:- 88 1/1, FUSSELS LANE, WELLAWATTAI COLOMBO - 06. T.P. N0 - 2366624, 077 - 6675467, 021 2222782. (1062)

# புலிகளுக்கு எதிரான மறைமுகப் போரை நடத்தும் அரசைக் கண்டிக்க வேண்டும்!

## சர்வதேச சமுகத்திடம் வேண்டுகோள்

(ஜெனிவா)

விடுதலைப் புலிகளின் - மட்டு- அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு மற்றும் மூன்று அரசியற்துறைப் போராளிகள் படுகொலைசெய்யப்பட்டமையானது, தமிழ்த் தேசியத்துக்கும், விடுதலைப் போராட்டத்துக்கும் எதிரான திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இரகசிய - மறைமுகப் போரை முன்னெடுக்கும் இலங்கை அரச தரப்புக்கு எதிராக, சர்வதேச சமூகம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெனீவாவைத் தளமாகக் கொண்டியங்கும் அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கேட்டுள்ளது.

அந்த அமைப்பு விடுத்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழர் தரப்பு சமாதான பேச்சுக் குழு உறுப்பினரும், சுனாமி தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கடுமையாக உழைத்து வந்தவருமான கௌசல்யன் தமிழர் ஒற்றுமைக்காக மிக மதிப்புள்ள பணியை ஆற்றியவர்.

கடந்த ஆண்டு ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் முன் நடைபெற்ற ஐரோப்பிய தமிழ் மக்களின் பொங்குதமிழ் நிகழ்வில், ஆற்றிய உரையை அனைத்துலக தமிழர்கள் இந்த துன்பமான வேளையில் நினைவுகூருகின்றனர்.

அவருடன் கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அரியநாயகம் சந்திரநேரு மனித உரிமைகளுக்கான தமிழர்களின் சர்வதேச செயற்பாட்டுக்குப் பெரும் உதவிகளை வழங்கியுள்ளார்.

இந்தப் படுகொலைகள் திட்டமிடப்பட்டு, இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதை வெளிவரும் அனைத்து ஆதாரங்களும் வெளிப்படுத்துகின்றன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சைப் பறித்து, ஐ.தே.க அரசைக் கலைத்த பின்னர் இத்தகைய சதிகார படுகொலைகள் இடம்பெற ஆரம்பித்தன என்பது இந்த வேளையில் சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும்.

இந்த நடவடிக்கை பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்புக்களுக்கிடையேயான நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் இழக்க வைத்துள்ளது. இந்தச் சூழல் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்.

இந்த சூழலில் சர்வதேச சமூகம் தீர்க்கமுடன் செயற்பட்டு மேலும் நிலைமை சீர்கெடாமல் பாதுகாக்க வேண்டும்.

குறிப்பாக - இராணுவத்துக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகள் அவற்றை நிறுத்தி, சமாதான நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட உதவவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# அமெரிக்கக் கடற்படை தாயகம் திரும்பத் தயார்!

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் தமது நிவாரணப்பணிகளை நிறைவு செய்துகொண்டு, தாயகம் திரும்பத்தாயாராகி வருவதாக பாதுகாப்புத்துறை அதிகாரி ஓருவர் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிக்கென பாதிக்கப்பட்ட ஏழு நாடுகளுக்கு தமது படைகளை அனுப்பிய அமெரிக்கா, தற்போது படிப்படியாகப் படைகளைத் தாயகத்துக்குத் திருப்பியழைத்து வருகிறது.

கடந்த சில வாரங்களாக சுமார் 1600 படையினருக்கு மேல் இலங்கையில் இருந்து வெளியேறி விட்டனர் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த சொற்ப எண்ணிக்கையானோரே தற்போது இலங்கையில் உள்ளனர். அவர்களும் தற்போது தாயகம் திரும்ப ஆயத்தமாகி வருகின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சுனாமி அனர்த்தத்தை அடுத்து சுமார் 12 இற்கும் மேற்பட்ட நாடுகளின் படைகள் நிவாரணப் பணிகளுக்காக இங்கு வந்தன. அவற்றில் பல நாட்டுப்படைகள் ஏற்கனவே தாயகம் திரும்பிவிட்டன.

ஒஸ்ரியா, கனடா, பெல்ஜியம், கிறீஸ், இத்தாலி, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள், கடந்த சில நாட்களில் தமது படைகளில் பெரும் பகுதியினரை திருப்பி அழைத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பில் வீடொன்றிலிருந்து ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்பு!

கொழும்பில் வீடொன்றிலிருந்து சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாரஹென்பிட்டியிலுள்ள வீடொன்றில் இருந்தே கைத்துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் உட்பட சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரால் சிங்களவர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவர் குறிபார்த்துச் சுடும் பயிற்சி பெற்றவர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (01)

# வெளிநாட்டுக் கொள்கை மாற்றப்படுவது அவசியம்

## பிரதி வெளிவிவகார அமைச்சர்

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்ளை மாற்றம் செய்யப்பட வேண்டும எனப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

இலங்கையில் அனைத்து இன மக்களினதும் இறைமையைப் பாதுகாக்கும் விதத்தில், புதிய வெளி நாட்டுக் கொள்கை ஒன்றை விரைவில் அமுல்படுத்த வேண்டும்.

சுனாமியின் பின்னர், இதற்கான அவசியம் உணரப்பட்டுள்ளதாகவும், சுனாமியின் பின்னர் வெளிநாட்டவர்கள் அதிகளவில் இலங்கைக்குள் வருவதற்கு, .இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கைகளே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கொபி அனானின் இரங்கல் செய்திக்கு தேசப்பற்றுள்ள இயக்கம் கண்டனம்



விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டிக்கும் வகையில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் விடுத்துள்ள இரங்கல் செய்திக்கு, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது இலங்கையின் ஒருமைப்பாட்டை உதாசீனப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக அந்த இயக்கத்தின் தலைவர் எல்.ஏ.குணவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதமொன்றை அந்த இயக்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பியுள்ளது. இதற்கு முன்னர் இலங்கையில் அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட வேளைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இவ்வாறான அறிக்கையொன்றை வெளியிடவில்லையென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

# சமாதான நடவடிக்கை குறித்து ஆளும் கூட்டணிக்குள் குழப்பம்!

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்



சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கக் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே தொடர்ந்தும் முரண்பாடான கருத்துக்கள் காணப்படுவதால், போர்நிறுத்த உடன்படிக்கை அச்சுறுத்தலுக்குட்பட்டிருப்பதாக ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சமாதான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் அல்லது இடை நிறுத்தப்பட்டிருந்ததால் அல்லது எதிர்காலத்தில் இதனை ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்புகள் இல்லாதிருந்தால், போர்நிறுத்த உடன்படிக்கை அச்சுறுத்தலுக்கு இலக்காகும். தற்போது இந்த நிலைமையே எமது நாட்டில் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். இதுவே இதற்கான ஒரே தீர்வாகும்.

போர்நிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாக்கும் கடமையும், பொறுப்பும் அனைவருக்கும் உள்ளது. விடுதலைப் புலிகளின் உயர் மட்ட உறுப்பினர் கௌசல்யனை கொன்றவர்களை இனங்காண்பதற்கான புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

நாடாளுமன்ற ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றுக்கு பாதிப்பேற்றபடாதென்ற உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்குமாயின், இந்தப் பிரமானங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு

சுனாமி அழிவிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முறை தொடர்பாக ஆராயவென நாடாளுமன்றக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதனை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் - சபாநாயகர் லொக்கு பண்டார தெரிவித்தார்.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்கவின் தலைமையில், தினேஸ்குணவர்த்தன. டக்ளஸ் தேவாணந்தா, முத்துசிவலிங்கம், நடராஜா ரவிராஜ், ஆர்.சம்பந்தன், பேரியல் அஸ்ரப், மங்கள சமரவீர, வஜிர அபேவர்த்தன, பாயிஸ் முஸ்தபா, ரவூப் ஹக்கிம் மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் இந்த நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். (01)

# சுனாமி நிவாரணப் பணிகளில் புலிகளை அனுமதிக்கக்கூடாது!

## நாடாளுமன்றில் அத்துரலிய தேரர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கு விடுதலைப்புலிகளை அனுமதிக்கக் கூடாது என்று ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் குறித்து நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரரே இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தனது உரையில் - தமிழர் புனர்வாழ்வுக்கழகம் குறித்தும் சந்தேகம் எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

### மீள் கட்டுமானப் பணி குறித்து ஆராய

# ஜப்பானிய குழுவொன்று இலங்கைக்கு வருகை!

ஜப்பான், இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கு, 16 பேர் கொண்ட குழுவொன்றை அனுப்பிவைத்துள்ளது.

கடந்த மாதம் 17 ஆம் திகதிமுதல் இந்தமாதம் 9 ஆம் திகதி வரை இந்தக்குழு, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள் கட்டுமானம் தொடர்பாக ஆய்வுகளை நடத்தியுள்ளதாக, ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது. ஜப்பானின் சர்வதேசக் கூட்டுறவு அமைப்பின் ஊடாக இந்தக் குழு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில், ஜப்பானின் அரசாங்க அமைச்சக அதிகாரிகள் துறைசார் நிபுணர்கள் கடலியல் ஆய்வாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு வழங்குவதற்கு உறுதியளித்துள்ள 80 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை, உரிய முறையில் பயன்படுத்துவது குறித்து, இந்தக் குழுவினர் அறிக்கை ஒன்றை ஜப்பானிய அரசாங்கத்துக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)








வெலிக்கந்தவில் படுகொலை செய்யப்பட்ட நான்கு போராளிகளின் இறுதி வணக்க நிகழ்வில் லெப்.கேணல் கௌசல்யனின் தாயார், கட்டளைத் தளபதி கேணல் பானுவைக் கட்டியழுவதை முதற்படத்திலும், தளபதிகள், பொறுப்பாளர்கள் மலரஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும், பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் வித்துடல்கள் துயிலுமில்லத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## ஹைதராபாத் ரெனிஸ்

# இந்திய வீராங்கனை சானியா அரையிறுதிக்குள் நுழைந்தார்!



(ஹைதராபாத்)

ஹைதராபாத்தில் நடைபெற்றுவரும் உலக மகளிர் ரெனிஸ் போட்டியில், முதல் செட்டை இழந்தபோதும் போராடி வெற்றிபெற்று இந்திய ரெனிஸ் புயல் சானியா மிர்சா அரையிறுதிச் சுற்றில் நுழைந்தார்.

ஹைதராபாத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பரபரப்பான காலிறுதி ஆட்டத்தில் 4-6, 6-3, 7-6 (7-5) என்ற செட் கணக்கில் இஸ்ரேல் வீராங்கனை திஸிபோர்ட் ஒப்ஸிலரை இவர் தோற்கடித்தார்.

அரையிறுதி ஆட்டத்தில் தரநிலையில் 8ஆவது இடத்தில் உள்ள ரஷ்ய வீராங்கனை மரியா கிரிலென்கோவுடன் இவர் விளையாடுவார்.

முன்னதாக நடைபெற்ற விறுவிறுப்பான காலிறுதி ஆட்டத்தில் ரஷ்யாவின் மரியா கிரிலென்கோ 6-4, 6-3 என்ற கணக்கில் தரநிலையில் முதலிடத்தில் உள்ள சீன வீராங்கனை நாலீயை அதிர்ச்சித் தோல்வியுறச் செய்து அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறினார்.

முதல் செட்டை போராடி வென்ற கிரிலென்கோ, 2ஆவது செட்டில் 4-1 என முன்னிலைபெற்று, பின்னர் லீயின் 9ஆவது சேவிஸை முறியடித்து 6-3 என வெற்றிபெற்றார்.

வியாழக்கிழமை நடைபெற்ற மற்றைய ஆட்டங்களில் அன்னா லெனா (ஜேர்மனி) 7-6 (7-5), 6-3 என்ற கணக்கில் சீனாவின் தியான் தியான் சன்னையும், உக்ரைன் வீராங்கனை அல்யோனா பாண்டாரென்கோ 7-6 (7-5), 6-4 என்ற கணக்கில் கனடாவின் மரியோ ஈவ் பெலட்டியரையும் தோற்கடித்தனர்.

# சலஞ்சர் கிரிக்கெட் கிண்ணம்; இந்திய 'ஏ' அணி கைப்பற்றியது!



(மும்பை)

என்.கே.பி.சால்வே சலஞ்சர் கிண்ணத்தை ராவிட் தலைமையிலான இந்திய 'ஏ' அணி கைப்பற்றியது.

மும்பையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பகலிரவு கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய 'ஏ' அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் கங்கூலி தலைமையிலான இந்திய சீனியர் அணியை வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய சீனியர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

அணியிலே அதிகபட்சமாக பட்டேல் 65 ஓட்டங்களையும், கப்டன் கங்கூலி 51 ஓட்டங்களையும் பெற்றனர்.


இந்திய 'ஏ' அணியின் பந்துவீச்சாளர்கள் ஆர்.பி.சிங் 3 விக்கெட்டுக்களையும், தினேஷ் மொங்கியா, எஸ்.எஸ்.பால் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

212 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய 'ஏ' அணி 48.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து இலக்கை எட்டி வெற்றிபெற்றது.

ராவிட் 72 ஓட்டங்களுடனும், கைப் 42 ஓட்டங்களுடனும் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். முன்னதாக யாதவ் 55 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

தமிழக வீரர் எல்.பாலாஜி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# பயிற்சிகளில் ஒழுங்கீனமாக நடந்ததால் 3 பாகிஸ்தான் வீரர்களுக்கு அபராதம்!



தவறுசெய்த கிரிக்கெட் வீரர்களுக்கு அணி நிர்வாகமே அபராதம் விதித்த சம்பவம் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் நிகழ்ந்துள்ளது.

சமீபத்தில் முடிவுற்ற அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் சொகைப் அக்தர் உட்பட 3 வீரர்கள் அபராதம் பெற்றுள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

மூத்தவீரர் அக்தர் மட்டுமல்லாது யசிர் ஹமீட், சல்மான் பட் ஆகியோரும் டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக அந்தத் தண்டனையைப் பெற்றுள்ளனர்.

குறிப்பிட்ட நேரத்துக்குப் பயிற்சிக்கு வராததே இதற்குக் காரணமாகும்.

அவர்களுக்காகக் காத்திருந்த பஸ்ஸுக்கு மூவரும் குறிப்பிட்ட நேரத்துக்கு வரவில்லை. அதன்பின்பு, வாடகைக்காரில் அவர்கள் மைதானத்துக்கு வந்துள்ளனர்.

இதையடுத்து ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக மூவருக்கும் தலா 50 அவுஸ்ரேலிய டொலர்களை அபராதமாக விதித்தது பாகிஸ்தான் அணி நிர்வாகம்.

அணியின் மேலாளராகச் சென்றிருந்த ஹரூன் ரஷீத் இந்தத் தகவலை கராச்சியில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

# மொஹாலி ஆடுகளம் சிவசேனாவால் சேதம்!

(மொஹாலி)

இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் அடுத்தமாதம் கிரிக்கெட் போட்டி நடைபெற இருக்கிறது. இந்தப் போட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவசேனா இயக்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த இயக்கத் தொண்டர்கள் சிலர், மொஹாலி கிரிக்கெட் மைதான ஆடுகளத்துக்கு சேதம் விளைவித்தனர். சேதம் மிகச்சிறிய அளவுதான் என்றும், போட்டி நடைபெறும் ஆடுகளத்துக்கு போராட்டத் தொண்டர்கள் செல்வதற்கு முன்பு பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்துவிட்டனர் என்றும் பஞ்சாப் கிரிக்கெட் சங்கப் பொருளாளர் ஜி.எஸ்.வாலியா நிருபர்களிடம் தெரிவித்தார். ஆடுகளங்களில் ஒன்று சேதப்படுத்தப்பட்டதைப் பொலிஸாரும் உறுதிசெய்தனர்.

இதற்கிடையில் ஆடுகளம் சேதப்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு சிவசேனா இயக்கத்தின் புதுடெல்கி தலைவர் ஜெய் பகவான் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தியாவில் எந்தவொரு போட்டியிலும் பங்குபெற பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு அனுமதி வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்தின் ஒரு கட்டம்தான் இந்தச் சம்பவம். இந்தியாவில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்து வருவதை பாகிஸ்தான் நிறுத்தாதவரை எங்கள் போராட்டம் தொடருமென அவர் தெரிவித்தார்.

கடந்த 1999ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அணியின் இந்திய வருகையையொட்டி, புதுடெல்கி மைதான ஆடுகளமும் சிவசேனா தொண்டர்களால் சேதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் போட்டிகளில் பொதுவான நடுவர்கள்!

## நியமிக்க பாகிஸ்தான் கோரிக்கை

டெஸ்ட் போட்டியைப் போன்று ஒருநாள் ஆட்டங்களிலும் பொதுவான நடுவர்களையே பணியில் அமர்த்தவேண்டுமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அதனைப் பரிசீலிப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

பொதுவான நடுவர்களை நியமிக்கவேண்டுமென்ற பாகிஸ்தானின் கோரிக்கைக் கடிதம் வந்துள்ளது. அது குறித்து சரியான தருணத்தில் முறைப்படி ஆய்வு செய்யப்படும்.

அநேகமாக லோர்ட்ஸில் மே மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்படுமென ஐ.சி.சி. செய்தித் தொடர்பாளர் ஜோன் லோங் அவுஸ்ரேலிய அசோஸியேட்டட் பிரஸ் நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளுடன் முத்தரப்பு ஒருநாள் தொடரில் சமீபத்தில் விளையாடியது பாகிஸ்தான். அப்போது அவுஸ்ரேலியாவுக்குச் சாதகமாக சில தீர்ப்புகள் அமைந்ததாகப் புகார்கள் எழுந்தன.

இதையடுத்து டெஸ்ட் போட்டிக்கான நடைமுறை மாதிரி, இரு அணிகள் விளையாடும் போது அந்த நாட்டைச் சாராத நடுவர்களை ஒருநாள் போட்டிகளிலும் பணியில் அமர்த்த வேண்டுமென பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது ஒருநாள் ஆட்டங்களில் ஒரு உள்ளூர் நடுவரும், ஒரு வெளிநாட்டு நடுவரும் பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஐரோப்பிய நட்புறவு உதைபந்தாட்டப் போட்டியின் ஒருகட்டமாக சென்ற புதன்கிழமை டெஸல்டிராப் நகரில் நடைபெற்ற போட்டி ஒன்றில் பிரான்ஸ், சுவீடன் அணிகள் மோதின. இதன்போது வீரர்கள் இருவர் பந்தை தலையால் இடிக்கும் காட்சி. இந்தப் போட்டி சமநிலையில் முடிவுற்றது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை இந்திய அணி சுலபமாக வீழ்த்தும்!

## ஸ்ரீவ் வோ தெரிவிப்பு



(கொல்கத்தா)

பாகிஸ்தான் அணியை இந்தியா சுலபமாக வீழ்த்தும் என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவ் வோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தமாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இந்தப் போட்டிக்கான மோதல் அட்டவணை இன்னும் முடிவுசெய்யப்படவில்லை.

குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத்தில் திட்டமிடப்பட்டுள்ள டெஸ்ட் போட்டியில் ஆட பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்துள்ளது. இந்தப் போட்டியை வேறு இடத்துக்கு மாற்றவேண்டுமென்று பாகிஸ்தான் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகள் தற்போது பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர்.

இதன் காரணமாக மோதல் அட்டவணை அறிவிப்பதில் குழப்பம் நீடிக்கிறது. இந்தநிலையில், நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்குப் பிரகாசமான வெற்றிவாய்ப்புள்ளதாக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவ் வோ நிருபர்களிடம் கூறினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டும் நோக்கில் ஸ்ரீவ் வோ தற்போது இந்தியா வந்துள்ளார். கொல்கத்தாவில் அவர் நிருபர்களிடம் பேட்டியளிக்கையில் –

இந்திய – பாகிஸ்தான் கிரிக்கெட் மோதல் ரசிகர்கள் மத்தியில் இப்போதே அதிக எதிர்பார்ப்பை உண்டாக்கியிருக்கிறது. இரு அணியிலும் திறமை வாய்ந்த வீரர்கள் பலரும் இருக்கிறார்கள். ஆனால் சொந்த மண்ணில் இந்திய அணி எப்போதுமே ஆதிக்கம் செய்யும்.

அந்தவகையில் பார்த்தால் இந்தியாவுக்கு இந்தத் தொடர் அதிக சாதகமாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்திய அணியில் உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள். பந்துவீச்சில் குறிப்பாக இர்பான் பதான் இந்திய அணிக்கு கிடைத்த வரப்பிரசாதம்.

பாகிஸ்தான் அணியிலும் திறமையானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை எப்போதும் நம்பமுடியாது. சமீபத்தில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் பெரியளவில் சோதனை கொடுக்கவில்லை.

எனவே இந்திய மண்ணிலும் பாகிஸ்தான் அணிக்கு சோதனை காத்திருப்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

# விளையாட்டு விபரீதமானது






# சிறுவர் அரங்கம்

## தூருவெள்



### அன்புக்குரிய சிறுவர்களே!


உங்கள் வகுப்பறையில் உங்களைப் போன்ற பல மாணவர்கள் கல்வி கற்பதற்கு வந்திருப்பார்கள்.

சில மாணவர்கள் உங்களுக்கு ஏற்கனவே தெரிந்தவர்களாக இருப்பார்கள். பலரை உங்களுக்கு முன்னரே தெரிந்திருக்காது. பாடசாலையில் சேர்ந்த பிறகுதான் அறிமுகமாகி இருப்பார்கள்.

உங்களுக்கு எப்படி ஒவ்வொரு விடயத்திலும் விருப்பங்கள், வெறுப்புகள் இருக்குமோ அதேபோல தான் மற்ற மாணவர்களுக்கும் விருப்பங்கள், வெறுப்புகள் இருக்கும். அதனை நீங்கள் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். இதனை நீங்கள் உணர்ந்துகொண்டீர்களானால் வகுப்பறையில் ஏனைய மாணவர்களுடன் உங்களால் அனுசரித்துப்போக முடியும். அவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்துப் பழகும்போது உங்களுடைய வகுப்பறை மாணவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதைக் காண்பீர்கள்.

வகுப்பறையில் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பது உங்களுக்கு விருப்பம்தானே!

- பாசமுடன் சாரு அக்கா



## காந்தித் தாத்தா

காந்தித்தாத்தா நம் தாத்தா
கருணைமிக்க பெருந்தாத்தா
சாந்தமூர்த்தி என்றென்றும்
சத்தியமூர்த்தி நம்தாத்தா

காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்.
வேலை இன்றிச் சிறுபொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்.

கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட்டிடுவார் நம் தாத்தா

சத்தியம் பேசுதல் அவர் கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர் கொள்கை.

செ.ஜெறின் சோபன்யா
தரம் - 5
இளவாலைக் கன்னியர்மடம்
மகா வித்தியாலயம்.



### சிந்தனைக்கு

புத்தகங்கள் நம் மனத்தோடு பேசுகின்றன.
நண்பர்கள் நம் இதயத்தோடு பேசுகின்றனர்.

## பிரிவு - தரம் 1 இலிருந்து தரம் 5 வரை ஓவியப்போட்டியில் பரிசு பெற்றவர்களின் பெயர்களும் , ஓவியங்களும்.

முதலாம் பரிசு : சிவகாந்தன் சுவீற்றா
தரம் - 5
ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்.



இரண்டாம் பரிசு : கனேசபிள்ளை தனுஷா
தரம் -4
ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை



மூன்றாம் பரிசு : ஸ்ரீஇராஜேஸ்வரன் ரகுராஜ்
தரம் - 5
வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.



## விடுகதைகளும் விடைகளும்

1. பூக்கும் காய்க்கும் ஆனால் காயம் உட்கார இடமில்லை. அது என்ன?
2. பூக்காத பூ. என்ன பூ?
3. கல்வீட்டு தாத்தா மெதுவாக நடந்து வருகிறார். அவர் யார்?
4. வெயிலில் மலரும், காற்றில் வாடும். அது என்ன?

**விடைகள்**

1. நெற்கதிர் 2. சிரிப்பு
3. ஆமை 4. வியர்வை

- க.ஆனந்
தரம் - 8
சென் ஜோன்ஸ் கல்லூரி

# MY PET




My pet is a dog.
It's name is tommey.
It is a small dog.
It is very beautiful.
My pet eats rice and curry,

*A.Ravivarman*
*uduvil girl's college,*
*grade - two*



# நரியும் சேவலும்

ஒரு நாள் காலை நரி ஒன்று கிராமத்திற்குள் வந்தது. வழியில் ஒரு பண்ணை ஒன்றைக் கண்டு அதனருகில் வந்தது. பண்ணையில் கோழிகள் நிற்பதைப் பார்த்து, அங்குள்ள கோழிகளில் ஒன்றைப் பிடித்துத் தின்ன விரும்பியது. வேலியின் இடையே புகுந்து உள்ளே சென்றது. அங்கே விளைந்திருந்த பயிர்களின் நடுவில் சுருண்டு படுத்துக்கொண்டது.




ஆனால் சிறிது தொலைவில் மேய்ந்து கொண்டிருந்த கோழிகள் நரியைப் பார்த்து விட்டன. உடனே அவை கத்திக்கொண்டே தூரத்துக்கு ஓடிப்போய் விட்டன. நரி அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்தது. குப்பை மேட்டில் ஒரு சேவல் அமர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது.

சேவலைத் தின்றால் சுவையாயிருக்கும் என்று எண்ணிய நரி பயிர்களின் இடையே மெல்ல மெல்ல நகர்ந்து சேவலை நெருங்கி அதன் மேல் பாய்ந்தது.

திடீரென விழித்த சேவல் நரியிடம் சிக்காமல் பறந்துஅப்பால் போனது.

சேவலே! ஏன் என்னைக் கண்டு அஞ்சுகிறாய்? உன் குரலைக் கேட்டு மகிழ நான் எவ்வளவு தொலைவிலிருந்து வருகிறேன் தெரியுமா? என்று அன்பாகக் கேட்டது.

'நரியாரே நீர் என்னை ஏமாற்றப் பார்க்கிறீரே!' என்றது சேவல்.



உறுதியாகச் சொல்வேன். இல்லவே இல்லை என்னால் உனக்குத் துன்பம் நேர்ந்தால் என் காலை வேண்டுமானால் வெட்டிக் கொள். ஆனால், எனக்காக ஒரே ஒரு முறை கூவு! கேட்க ஆவலாயிருக்கிறேன். என்று மீண்டும் கூறியது நரி.

சேவலுக்கு நம்பிக்கை வரவில்லை. ஆனாலும் ஒரு கண்ணைத் திறந்து கொண்டு நரியைப் பார்த்தபடி ஒரு முறை கூவியது.

'ஆகா நன்றாயிருக்கிறது. ஆனால், நீ குரலை அடக்கிக் கொண்டு கூவுகிறாய். நீ உரத்த குரலில் கூவினால் நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்குக் கேட்குமாமே'. அது உண்மையா? என்று கள்ளத்தனத்துடன் கேட்டது நரி.

நரியின் புகழ்ச்சியில் மயங்கிய சேவல், தன் வலிமை கொண்ட மட்டும் முயன்று - கொக்கரக்கோ என்று உரத்த குரலில் நீளமாகக் கூவியது. அப்போது அதன் இரண்டு கண்களும் மூடிக்கொண்டன.

அதைத்தானே நரி எதிர்பார்த்தது. உடனே அது சேவலின் மேல் பாய்ந்து கழுத்தைப் பிடித்துக் கொண்டது. நல்ல இரை கிடைத்த மகிழ்ச்சியில் அது ஓடத் தொடங்கியது.


அதைப் பார்த்த கோழிகள் பயந்து பெருங் கூச்சலிட்டன. கூச்சலைக் கேட்ட பண்ணையாள் ஓடி வந்து, சேவலுடன் ஓடும் நரியைக் கண்டான். சத்தமிட்டுக் கொண்டு அதைத் தொடர்ந்து ஓடினான். அங்கு வேலை செய்து கொண்டிருந்த மற்றைய வேலையாட்களும் உடன் ஓடினார்கள். நரியை ஏசிக் கொண்டே துரத்தினார்கள்.



எப்படியாவது தான் தப்பிக்க வேண்டும் என்று சேவல் திட்டமிட்டது.

நரியாரே! என்ன இப்படியெல்லாம் உன்னைத் திட்டுகிறார்களே? அவர்களுக்குத் திருப்பி ஏதாவது ஒன்றும் சொல்லாமல் போவது உமக்குப் பெருமை இல்லை. எனக்கே வெட்கமாயிருக்கிறது! என்றது சேவல்.

எப்படி ஓடி வந்தாலும், என்னைப் பிடிக்கவே முடியாது! என்று து·ரத்திக் கொண்டு வருபவர்களைப் பார்த்து நரி சொன்னது.



எல்லோரையும் ஏமாற்றும் நரி இந்த முறைதானே ஏமாந்தது. நரி கதைக்கத் தொடங்கியதும் சேவல் தன் சிறகுகளை அடித்துக்கொண்டு தப்பியது. அருகில் இருந்த மரத்தின் மேல் பறந்து சென்று அமர்ந்தது.

ஏமாந்த நரி வேலியருகில் நின்று தன்னிடமிருந்து தப்பிக் கொண்ட சேவலை ஏக்கத்தோடு பார்த்தது.

நரியாரே! உமக்குப் பசியில்லாவிட்டால் சிறிது நேரம் இரும்.உமக்குப் பிடித்த கூவலை மீண்டும் ஒருமுறை கேட்டுப் போகலாம் என்றது சேவல்.

வேலையாட்களும் நாய்களும் தன்னை நெருங்குவதைக் கண்ட நரி தான் பிழைத்தால் போதுமென்று காட்டை நோக்கி ஓடியது.


## யார் மோதினாலும்

மண் பாலை ஒன்றிற்கும் இரும்புப் பானை ஒன்றிற்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

கோபத்துடன் மண் பானை ஏய்! இரும்புப பானையே! என்னடா சண்டைக்கு வருகிறாய்? இப்பொழுதே உன்னுடன் மோதப் போகின்றேன். உன்னைப் பாதுகாதத்துக் கொள் என்று கோபத்துடன் சத்தமாகப் பேசியது.

இதைக் கேட்ட இரும்புப் பானை - நீ என்னோடு மோதினாலும் சரி. நான் உன்னுடன் மோதினாலும சரி உடைந்து நொறுங்கப் பேவது நீதான். அதனால் எனக்குச் சிறு சேதமும் ஏற்படப் போவதில்லை. உன் இயல்பை உணர்ந்து கதை என்று கூறியது.

மேலிருக்கும் கோணத்தின் மறுபக்கத் தோற்றம் கீழே உள்ள இரண்டு படங்களில் எது?




# சிந்தித்து இடத்தைக் கண்டுபிடியுங்கள்

1. ஒரு பறவையின் பெயரையும், ஒரு மரத்தின் பெயரையும் சேர்த்தால் வருவது?

2. கோயில்களில் ஒலியெழுப்பும் கருவியையும், வீட்டிற்குப் பாதுகாப்பை அளிப்பதற்காக சுற்றி அமைக்கப்படுவதையும் இணைத்துப் பாருங்கள்?

3. மனித உறுப்புக்களில் ஒன்றையும், நாரினால் தொடுக்கப்பட்ட பூக்களின் தொகுதியையும் சேர்த்தால் அவ்விடம் யாது?

4. புளிப்புத் தன்மையுடைய கனியையும், நீளத்தை அளப்பதற்குப் பயன் படும் அலகு ஒன்றையும் சேருங்கள் அப்போது வருமிடம்?

5. முதல் மூன்று எழுத்துக்கள் ஒரு பூக்கொடியின் பெயரையும், கடைசி இரு எழுத்துக்கள் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பையும் குறிக்கும் அந்த இடம் யாது?

விடைகள்

1. [illegible]
2. சங்குவேலி
3. [illegible]
4. [illegible]
5. முல்லைத்தீவு

# மூளைக்கு வேலை

1. ஒரு தொழிற்சாலையில் 42 தொழிலாளர்கள் 12 நாட்கள் பணிபுரிந்தால் ரூபா 25,200 சம்பளமாக வழங்கப்படும். அதே தொழிற்சாலையில் 35 தொழிலாளர்கள 18 நாட்களுக்கு பணிபுரிய நேரிட்டால் செலவாகும் சம்பளம் எவ்வளவு?

2. விநோதினியின் எடை அவள் தாயாரின் எடையில் மூன்று மடங்கு குறைவு. விநோதினியின் தம்பி சுரேஷின் எடையும் அவளை விட மூன்று மடங்கு குறைவு. சுரேஷின் எடை 8 கிலோ எனில் தயாரின் எடை எவ்வளவு?


## மூளைக்குவேலை சென்றவார விடைகள்

ரூபா 5 10 300
1 ஆண்டு = 12 மாதங்கள்
6 075 மீ X 12 X 7 = ரூபா 5 10 300 /=

# மாறிக்கிடக்கும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்


1. ரு/ம்/ பு/ க ..............................
2. பு/ எ/ ம்/ று ..............................
3. தை/ ழ/ ந்/ கு..............................
4. க்/ ம்/ ஓ/ மு/ க..............................
5. கு/ மெ/ ரி/ மு/ தி ..............................

ஒவ்வொரு வரிசையில் உள்ள இரு உருக்களும் ஒரே விதமான எழுத்தில் ஆரம்பிக்குமாயின், ஆம் என்றும் இல்லையெனில் இல்லை என்றும் எழுதுங்கள்.







மூன்று பேரில் யாருடைய தொப்பியைக் காண வில்லை. கண்டு பிடியுங்கள்.



1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்ட பென்சில்களில் எந்தப் பென்சிலைப் பயன்படுத்தி அரவிந்தன் எழுதுகிறார்.?




புள்ளிகளை இணைத்து உருவத்தைக் கண்டு பிடியுங்கள். பின்னர் உருவத்துக்கு வர்ணம் தீட்டுங்கள்.



# முல்லா தந்த போர் வாள்



ஒருமுறை, நீண்ட பயணம் ஒன்றை மேற்கொள்ள முல்லா திட்டம் போட்டார். இதற்காகத் தன்னுடைய கழுதையுடன் பிரயாணத்தைத் தொடங்கினார்.

இதை அறிந்த, முல்லாவின் பக்கத்து வீட்டுக்காரர் வந்து முல்லா, வழியில் திருடர்கள் உங்கள் கழுதையைத் திருடிக்கொண்டுபோய் விடுவார்கள். எனவே நான்தரும் வாளைக் கொண்டு சென்றால், உங்கள் கழுதையைத் திருடர்களிடமிருந்து காப்பாற்ற உதவும். என்று சொல்லிப் போர்வாள் ஒன்றை முல்லாவிடம் கொடுத்தார்.

போர்வாளை வாங்கிக்கொண்டு முல்லா புறப்பட்டார். வழியில் ஒருவன் வருவதை முல்லா கண்டார். அடுத்த வீட்டுக்காரன் கூறிய திருடன் இவனாகத்தான் இருக்கவேண்டும். எனவே, கழுதையை இவன் கவர்ந்து கொள்வதற்கு முன்னர் கழுதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டார் முல்லா. அவன் முல்லாவை நெருங்கியதும், பக்கத்து வீட்டுக்காரர் கொடுத்த போர்வாளை அவனிடம் நீட்டி 'ஐயா! இந்த வாளை எடுத்துக்கொண்டு என் கழுதையை விட்டு விடுங்கள்' என்று வேண்டிக்கொண்டார்.

முல்லா இவ்வாறு சொல்வதைக் கேட்டு, முதலில் ஒன்றும் புரியாமல் திகைத்தான் வழிப்போக்கன்.

மறுகணம் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு போர்வாள் தனக்குக் கிடைப்பதை எண்ணி மகிழ்ச்சியடைந்து 'சரி அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு போர்வாளை வாங்கிக்கொண்டு சென்றான்.

முல்லாவும் சந்தோஷமாகத் தனது பிரயாணத்தை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினார். அடுத்தநாள், பக்கத்து வீட்டுக்காரரைச் சந்தித்து, 'நண்பரே! நீங்கள் கூறியபடியே நடந்துகொண்டேன். உங்கள் போர்வாள் மூலம் கழுதையைக் காப்பாற்றிவிட்டேன்.' என்று முல்லா கூறினார். அதைக்கேட்ட பக்கத்து வீட்டுக்காரர் மகிழ்ச்சியடைந்தார்.

பின்னர், தனது போர்வாளை அவர் திரும்பக்கேட்க, அதற்கு முல்லா நடந்தவற்றை அப்படியே கூறினார். அதைக்கேட்ட பக்கத்து வீட்டுக்காரர் அதிர்ச்சியடைந்து, 'ஐயோ! முல்லாவின் முட்டாள்தனத்தால் என்னுடைய போர்வாள் பறிபோயிற்றே!' என்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டார்.

# சிரிப்புகள்





ஆசிரியை - உலகம் உருண்டை என்பதை எப்படி நிரூபிப்பாய்?

மாணவன் - உலகம் உருண்டைன்னு நான் சொல்ல வேயில்லை ரீச்சர்.



ரகு - எந்தக் குருவியாவது பணம் சேகரிக்குமா தாத்தா?

தாத்தா - சேர்க்காதே ரகு

ரகு - பின்ன அப்பா ஏன் அடிக்கடி குருவி மாதிரி சேர்த்த பணம் என்று சொல்றார்!!



ஆசிரியர் - காட்டில் வசிக்கும் 5 விலங்குகளின் பெரைச் சொல்லுங்கள்.

மாணவன் - 2 சிங்கம் 3 யானை.



# அண்ணாவும் தங்கையும்

## எப்படி விலங்குகள் தமது காயத்தை .மாற்றிக் கொள்கின்றன?

பாடசாலை முடிந்து குழலியும், யாழினியும், ரதியும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். பாடசாலையிலிருந்து வரும் வழியில் ரதியின் மாமா வீடு இருக்கிறது.

இவர்கள் வீட்டுக்கருகில் வரவும், ரதியின் மாமி, படலையைத் திறக்கவும் சரியாக இருந்தது.


இவர்களைக் கண்டவுடன் ரதியின் மாமி அவர்களை வீட்டிற்குள் வருமாறு அழைத்தார். அவரது அழைப்பைத் தட்ட முடியாமல் மூவரும் உள்ளே சென்றார்கள்.

மாமா - என்ன கனநாளைக்குப் பிறகு வாறீங்கள்?

ரதி - ஓம் மாமா! இங்க வந்து கனநாளாகப் போட்டுது.

யாழினி - எங்களைக் கண்டவுடனேயே உங்கட நாய் ஓடி வரும், எங்க காணேல்ல.

மாமி - அதையேன் கேக்கிறீங்கள். முந்தநாள் றோட்டில



ஒரு சைக்கிளில ஜிம்மி அடிபட்டுட்டுது. ஏலாம பின் விறாந்தையில படுத்திருக்குது.

(மூவரும் வீட்டின் பின்பக்கம் ஓடிப்போனார்கள். ஜிம்மி முனுகியவாறு, தனது காயத்தை நக்கியபடி இருந்தது. இவர்களைப் பார்த்து, சிறிதாக வாலை ஆட்டிவிட்டு, மீண்டும் தனது காயத்தை நக்கத் தொடங்கியது)

குழலி - ஜிம்மிக்கு சரியாக நோகுது போல.

ரதி - காலில பெரிய காயம்...

யாழினி - ஓ !.... அங்க பாருங்கோ, தோல் பிஞ்சிருக்குது!

ரதி - காயத்துக்கு மருந்து போடேல்லையோ?

குழலி - மாமியக் கேப்பம் வாங்கோ.

( மீண்டும் முன்பக்கம் மூவருமாக ஓடிப் போனார்கள்)

யாழினி - மாமி, ஜிம்மிக்கு மருந்து கட்டேல்லயோ? (மாமாவும், மாமியும் சிரித்தார்கள்)

மாமா - அது, தன்பாட்டில ஆறிவிடும்.

ரதி - அது எப்படி ஆகும். மருந்து போட்டாத்தானே மாறும்.

குழலி - சங்கர் அண்ணாட்டக் கேப்பம்

யாழினி - மாமா இருட்டுது, நாங்கள் நாளைக்கு வாறம்.

(மூவரும் அவசர அவசரமாக வீடு நோக்கிப் போனார்கள்)

(தொடரும்...)

## ஏன் பறவைகள் தமது முட்டையைத் திருப்புகின்றன?




தாய்ப்பறவை முட்டைகள் இட்ட நாள் முதல், கூட்டைவிட்டு வெளியே வருவதில்லை. முட்டைகளின் மீது அமர்ந்தபடி இருக்கும்.

முட்டைக்குள் இருக்கும் குஞ்சுகள் இந்த வெப்பம் மூலமே வளர்ச்சியடைகின்றன.

இதனால், முட்டையின் ஒவ்வொரு பாகத்திற்கும் வெப்பம் தேவைப்படுகிறது. இப்போது தெரிந்து விட்டதா, ஏன் பறவைகள் தமது முட்டைகளைத் திருப்புகின்றன என்று!

## குழப்படி செய்தால் எந்த மிருகத்துக்கு அடி கிடைக்கும்?



குட்டியானை குழப்படி செய்தால், தாய் யானை தனது தும்பிக்கையால் ஓங்கி அடித்து தண்டனை கொடுக்கும். அடி விழுந்தவுடன் தான் குழப்படி செய்யக் கூடாதென்று குட்டியானைக்கு விளங்கி விடும்.

அடிப்பதற்கு மட்டுமல்ல, தனது குட்டியானைகளையும், தொழுவில் உள்ள ஏனைய குட்டிகளையும் வருடி விடுவதற்கு தாய் யானை தும்பிக்கையைப் பயன்படுத்தும். அது அவற்றின் அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

சொலல்வல்லான் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது
திருக்குறள்

# நமது நோக்கு

## பொறுமையைக் காக்கக் கோருவது நியாயமுமில்லை...

## பொறுமையைக் கடைப்பிடிப்பது சாத்தியமுமில்லை!

பொலநறுவ - மட்டக்களப்பு வீதியில் உள்ள வெலிக்கந்த பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை இரவு விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு விடுதலைப் புலிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்ட கொடூரமானதும், கோழைத்தனமானதுமான சம்பவமானது சமாதானம் தொடர்பாக இன்றைய அரசின் மீதும், ஜனாதிபதியின் மீதுமிருந்த அற்பசொற்ப நம்பிக்கையையும் அமைதிவிரும்பும் மக்கள் அனைவருக்கும் இல்லாமல் செய்துவிட்டது.

இந்த அரசு பதவிக்கு வரும்போது இது சமாதான முயற்சிகளுக்கு எதிரான பேரினவாத தமிழின விரோத சக்திகளின் கூட்டணி அரசாங்கம்தான் என்பது அனைத்துத் தரப்பினராலும் தீர்க்கமாக அடையாளப்படுத்தப்பட்டதாகவே இருந்தது.

ஆட்சிக்கு வரமுன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் புதிய அரசியல் கூட்டமைப்பொன்றை ஜனாதிபதி சந்திரிகா - ஜே.வி.பியினருடன் இணைந்து ஆரம்பித்த போதே அவர்களின் பிரதான இலக்கு சமாதான முயற்சிகளை நிறுத்திவிட்டு, விடுதலைப் புலிகளுடனான நோர்வே அனுசரணையுடன் கூடிய சமாதானப் பேச்சுவார்த்தைகளை கைவிடும் நோக்கத்தையே கொண்டிருந்தது என்பது ஒன்றும் ரகசியமான விடயமல்ல, இதனை அவர்கள் தேர்தல் மேடைகளில் ஓங்கி ஒலிக்கவே செய்தனர்.

தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பலமற்ற நிலையில் ஆட்சியைக் கைப்பற்றிய பின், தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் சர்வதேச அழுத்தங்களுக்கும், கடன் வழங்கும் நாடுகளின் வலியுறுத்தல்களுக்கும் உட்பட்டு எந்தவிதமான ஆத்மார்த்த ஈடுபாடோ, விருப்போ இன்றி ஜனாதிபதி மீண்டும் சமாதானம் பற்றிப் பேசத்தொடங்கியபோதே, அதனை சாத்தான் ஓதும் வேதமாக இனங்காண்பதென்பது தமிழ் பேசும் மக்களுக்கும், ஏனைய சமாதான ஆதரவு சக்திகளுக்கும் கடினமாக இருக்கவில்லை.

ஆனாலும், இது சமாதானத் தேவதையல்ல.. சமாதானத்திற்காக யுத்தம் செய்யும் போர் வெறிகொண்ட ஒரு துஷ்ட தேவதைதான் என்பதை எல்லோருக்கும் உணர்த்த வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்ததனால், சமாதான வழியில் இன்றுவரைக்கும் அச்சமூட்டும் நம்பிக்கையற்ற சூழலிலும் நடக்கவேண்டியதாயிற்று.

ஆனாலும், வெலிக்கந்த படுகொலைச் சம்பவம் அனைத்தையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து விட்டது.

சமாதானத்தைக் காப்பாற்றுவதற்காக மட்டுமல்ல, சமாதான விரோதிகளை இனங்காட்டு அவர்கள் யாரென உறுதிப்படுத்துவதற்கும் விடுதலைப்புலிகள் இந்த ஆட்சிக்காலப் பகுதிக்குள் பெரும்விலையைக் கொடுக்கவேண்டியவர்களாகிவிட்டனர். இதற்காக அவர்கள் எவ்வளவு பொறுமையை இதுவரை கடைப்பிடித்தார்கள் என்பது அனைவருக்கும் புரியும்.

வெலிக்கந்த அராஜகத்திற்குப் பின்னரும், விடுதலைப் புலிகள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என விரும்பும் - அதனை வெளிப்படையாகவே கூறும் சிங்களப் அரசும், படையினரும், அவர்களின் பின்னால் நின்று குற்றேவல் செய்யும் குழுக்களும், செய்யும் அனைத்து தமிழின விரோத அடக்குமுறை அழிவு நடவடிக்கைகளையும் தொடர்ந்து சகித்துக் கொண்டு குட்டக்குட்டக் குனியும் கோழைகளாக இருக்க வேண்டுமென்றா விரும்புகிறார்கள்?

தமிழர்களால் தொடர்ந்தும் அடிமைகளாக, அடக்குமுறைகளுக்கு அஞ்சிப் பதுங்கும் வாயற்ற மௌனிகளாகப் பொறுமைகாத்தல் என்பது சாத்தியமேயில்லை.

அத்தகைய பொறுமை அவர்களைப் பூண்டோடு அழிக்கும் வாய்ப்பினை பேரினவாதிகளுக்கும், இன விரோதிகளுக்கும் வழங்கிவிடும் என்பதே அவர்கள் கடந்த கால வரலாறு மூலம் படித்த பட்டறிவுப் பாடமாகும்.

"போராட்ட காலத்தில் சந்தித்த சதிகளை விட அமைதிக் காலத்தில் பெரும் சூறாவளியையும், பூகம்பத்தையும் சந்திக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்." என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியுள்ள வார்த்தைகளின் பின்னால் தொக்கியுள்ள அழுத்தமான வார்த்தைகள் விடுதலைப்புலிகள் இனிமேலும் பொறுமையுடன் அட்டூழியங்களைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்ற அழுத்தமான செய்தியை சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிப்பதாகவே உள்ளது.

எல்லாவகையிலும் போர்நிறுத்த உடன்பாட்டினை மீறிச் செயற்படும் இலங்கை அரசுடன் யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதும், சமாதானத் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதும் எந்த வகையிலாவது நன்மையைத் தருமா என்பதே தமிழ்மக்கள் சர்வதேச சமூகத்திடம் - சமாதானத்தை வலியுறுத்துவோரிடம் கேட்கும் வினாவாகும்.

இதற்கான உறுதியான, தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் உத்தரவாதத்துடன் கூடிய நம்பிக்கையூட்டும் பதிலை அவர்கள் கூற முடியாத நிலையே உள்ளது.

ஆயுத பாணிகளாக எதிரிகளும், துரோகிகளும் நடமாடும் பகுதிகளில், அவர்களின் பாதுகாப்புவேயே விடுதலைப் புலிகளை நிராயுத பாணிகளாக நடமாட கோருவது எந்த வகையில் நியாயமாகும்?

யுத்தத்தை எதிர்கொள்ளப் பெரும் விலையைக் கொடுத்துள்ள தமிழின சமாதானத்தை - அதுவும் தமிழ் மக்களுக்கு இதுநாள்வரை எந்த நன்மையுமே தராத சமாதானத்தைப் பாதுகாக்கவும், உயிர்களைப் பலியாகக் கொடுக்கவும் பொறுமையைக் கடைப்பிடிப்பதென்பது இனியும் சாத்தியமில்லை. - அப்படி எவரும் கோருவது நியாயமில்லை.




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# எத்தனை பேரழிவுகள் வந்தாலும் சிங்களப் பேரினவாதம் மாறாது!

சுனாமிப் பேரழிவின்பின் அரசாங்கத்தின் போக்கில் அல்லது தென்னிலங்கை அரசியல் போக்கில் மாற்றம் ஏதாவது தென்பட்டிருக்கிறதா?

இப்படியொரு கேள்வியை நேற்றுக்காலை நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் எழுத்தாளரும், கலை விமர்சகரும், பத்திரிகையாளருமான ஒரு நண்பர் கேட்டார்.

நீண்ட நாட்களின்பின் நல்லூரைத் தரிசிக்கும் பேறு நேற்றுக் கிடைத்தது. தரிசனம் முடித்து வெளியே வந்தபோது சிலவருடங்களுக்கு முன்னர் சந்திரிகா அம்மையாரின் அம்மை சிறிமா அம்மையார் நாகவிகாரையில் ஐந்து நிமிஷங்கள்கூடத் தங்காமல் அவசர அவசரமாக நல்லூர்க் கந்தனைத் தரிசிக்க ஓடிவந்தது, வாசலில் உதவி அரசாங்க அதிபர் முருகேசம்பிள்ளையார் வாளியில் தண்ணீர் எடுத்து அம்மையார் கால் கழுவ ஊற்றியது, அம்மையைப் பார்க்கவந்த மக்கள் கூட்டத்தைத் தூரத்தில் வீதித்தடை போட்டு மறித்தது, சண்முகன் சந்நிதியில் சிறிமா அம்மையார் தரையில் மணிக்கணக்காக அமர்ந்து அபிஷேகமும் சண்முகார்ச்சனையும் பார்த்துத் தரிசித்தது. அன்றைய மருமகன் குமார் ரூபசிங்கா விழுந்து விழுந்து முருகனைக் கும்பிட்டது முதலான காட்சிகள் எல்லாம் என் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தன. வெளியே வீதிக்கு வந்ததும் நான் முதலில் குறிப்பிட்ட எழுத்தாள நண்பர் சைக்கிளைத் தமது உடம்பில் சாய்த்தபடி நல்லூரானை நோக்கித் தரிசித்துக்கொண்டு நின்றார்.

அவர் தரிசித்து முடிந்ததும் நான் அவர் பார்வையில் பட்டேன். நலம் விசாரித்ததும் சுனாமிப் பேரழிவின்பின் மாற்றமேதுமுண்டா என்ற கேள்வியைக் கேட்டார்.

சுனாமிப் பேரலைகள் இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகளில்லாமல் சகல மக்களையுமே கடுமையாகத் தாக்கி கண நேரத்தில் அவர்களை உடுத்த துணிகூட இல்லாமல் அநாதைகளாக்கியிருக்கிறது. உற்றார் உறவுகளைக் காவுகொண்டிருக்கிறது. இயற்கை அழிவு ஏற்பட்டதுமே பாரபட்சமின்றி எல்லோருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இனி எந்த வேறுபாடுமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

இனப்பிரச்சினைக்கு நல்லதொரு சுமூகமான தீர்வு காண்பதற்கு சுனாமிப் பேரலையின் தாக்கம் வழிவகுத்துவிடுமென்றும் சிலர் நம்பிக்கை தெரிவித்தனர். பேரழிவினால் ஏற்பட்ட இந்த நல்ல சந்தர்ப்பத்தை நிவாரண உதவிகளுடன் சேர்த்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று உதவியளிக்க ஓடோடிவந்த சில வெளிநாடுகள் கூட யோசனை தெரிவித்தன. ஆனால் இந்த நல்ல சந்தர்ப்பத்தை அரசாங்கம் தவறவிட்டுவிட்டது.

சந்தர்ப்பத்தைத் தவறவிட்டதுமட்டுமல்ல. இந்த சுனாமிப் பேரழிவுடன் விடுதலைப் புலிகளும் அள்ளுண்டு போய்விட வேண்டுமென்று அவர்கள் ஆசைக்கனவுகளும் கண்டார்கள். இயற்கைப் பேரழிவில் எல்லோருமே எல்லாவற்றையும் பறி கொடுத்தது போன்ற ஒரு துயரமான சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதாக சிறிலங்கா கடற்படைத் தளபதியும் முப்படைத் தளபதியுமான தயா சந்தகிரியை மேற்கோள் காட்டி அரச ஊடகங்கள் வதந்தியைப் பரப்பின என்றால், அரசும் அதன் ஊடகங்களும் எந்தவிதமான கொடூரமான மனப்பான்மையைக் கொண்டிருக்கின்றன என்பது புலனாகும்.

சுனாமித் தாக்கத்தின் போது லண்டனிலிருந்த அம்மையாரும் சுனாமியால் விடுதலைப் புலிகளுக்குப் பேரழிவாம் என்று மகிழ்ச்சியுடன்தான் சொன்னார். முன்பு சூசை, தலைவருடன் கருத்து வேறுபாடுகொண்டு பிரிந்துபோய்விட்டதாக அவரது புலனாய்வின் பொய்யுரையை நம்பிக் கருத்துத் தெரிவித்த அம்மையார் இந்தமுறையும் அவர்கள் தரப்புத் தகவல்களை நம்பி சுனாமியால் புலிகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டதாகக் கருதிக் கருத்து வெளியிட்டார்.

அம்மையாரின் படைத்தரப்பும் இதேகருத்தை வெளியிட்டது. இதுமட்டுமல்ல ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் சுனாமி அனர்த்தங்களை நேரில் பார்க்கவந்த சமயத்தில் தமிழர் தாயகத்துக்கு அவர் போகவிடாமல் அரசு தடுத்தது. இந்தத் தடையைத் தாங்கள்தான் செய்ததாக ஜே.வி.பியினர் இப்பொழுது பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். கொபி அனான் தமிழர் தாயகத்துக்கு நேரில் சென்று அனர்த்த அழிவுகளைப் பார்வையிடுவதைத் தடுத்ததன் மூலம் மற்றொரு நல்ல சந்தர்ப்பத்தை அரசு இழந்துவிட்டது. இதன்மூலம் அரசும் தென்னிலங்கையும் எத்தனை பெரிய சுனாமிப் பேரழிவுகள் ஏற்பட்டாலும் இனவாதச் சிந்தனையிலிருந்து தாங்கள் ஒருபோதும் மாற மாட்டார்களென்பதையும் இதன்மூலம் அவர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

1956ஆம் ஆண்டில் ஆரவாரமாக ஆர்ப்பாட்டங்களுடன் கொண்டுவரப்பட்ட சிங்களச் சட்டமும் அதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான இலக்கத் தகடுகளில் பொறிக்கப்பட்ட சிங்கள ஸ்ரீ எழுத்துக்களும் இப்போது நலிந்தும் ஒழிந்தும் போயின என்றாலும் சிங்கள ஆதிக்கம், அப்பே ஆண்டுவ மனப்பான்மை நீங்கிவிடவில்லை.

1958 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக முதற் தடவையாகத் திட்டமிட்டு நடந்த இனக்கலவரம் 1983ஆம் ஆண்டுவரை தொடர்ந்தது. தமிழ் இனத்தை இலங்கையிலிருந்து அழித்து ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டே இனக் கலவரங்கள் ஆட்சியிலிருந்தவர்களாலும், ஆட்சி அதிகாரத்தை எதிர்பார்த்திருந்தவர்களாலும் தூண்டிவிடப்பட்டன. இலங்கையில் சகல மக்களும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ வேண்டுமென்பதுதான் தங்கள் கொள்கை என்று இன்றுவரை கூறும் அரசியல்வாதிகள் 1958ஆம் ஆண்டின் இலக்கலவரம் முடிந்த உடனேயே அது பற்றி விசாரணை செய்து மேலும் இனக் கலவரங்கள் தொடராமல் மலேஷியாவைப்போலத் தடுத்திருக்கலாம். ஆனால் தமிழினத்தை அழித்து ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்ட சிங்கள பௌத்த பேரினவாதம் இன்றுவரை அந்த நோக்கத்தைக் கைவிடவில்லை. 1983ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தியிருக்காவிட்டால் இன்று தமிழினம் இலங்கையில் இருந்திருக்காது. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்திரித்து உலக நாடுகள் அதைத் தடைசெய்ய வேண்டுமெனப் பிரசாரம் செய்து உலகப் பயங்கரவாத ஒழிப்பு என்ற அமெரிக்கத் திட்டத்துடன் செயற்படுத்தி புலிகளை ஒழிப்பதற்கு சிங்கள பௌத்த மேலாண்மைவாதம் இன்றுவரை தொடர்ந்து முயற்சிசெய்துகொண்டிருக்கிறது.

சுனாமிப் பேரழிவுடன் நாட்டில் வேறுபாடுகளை மறந்து இன ஐக்கியத்தை ஏற்படுத்தி நாட்டை முன்னேற்றவேண்டுமென்று எவர் கோரிக்கை விடுத்தாலும், தமிழ் மக்களுக்கெதிரான இனப் பாகுபாட்டிலிருந்து சிங்கள அரசியல்வாதிகள், ஆதிக்கவர்க்கத்தினர், ஆன்மீகவாதிகள் மாறவேயில்லை. இன்று தமிழின எதிர்ப்பை ஜே.வி.பி. மிக மும்முரமாகச் செயற்படுத்திவருகிறது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஜே.வி.பி.தான் இன்று பெரும் முட்டுக்கட்டையாக விளங்குகிறது.

எத்தனை சுனாமிப் பேரழிவுகள் வந்தாலும் சிங்கள பௌத்த மேலாண்மை தங்கள் இனவாதப் போக்கிலிருந்து மாறப்போவதில்லையென்பது உலக நாடுகள் அளிக்கும் நிவாரண உதவிகளைப் பங்கிடுவதில் தமிழ் மக்களுக்கெதிராகக் காட்டப்படும் பாரபட்சத்திலிருந்தே தெளிவாகிறது.

சுனாமி அழிப்பில் புலிகளின் தலைமைக்கும் இழப்பேற்பட்டது என்ற அரச ஊடகங்களின் பிரசாரம் அரசினதும், சிங்கள் பௌத்த மேலாண்மையினதும் மனப்பான்மையைத் தெளிவாக உணர்த்துகிறது.

போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் எப்போது தொடரும், நாட்டில் எப்போது அமைதி மீண்டும் ஏற்படும் என்று மக்கள் எதிர்பார்த்திருக்கும் இந்தச் சமயத்தில் மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளையும், முன்னாள் எம்.பி. அரியநாயகம் சந்திரநேருவையும் கபடத்தனமாகக் கொலை செய்திருக்கும் சம்பவங்களும் தென்னிலங்கை அரசியலில் எந்தவித மாற்றங்களும் ஏற்படமாட்டா தென்பதையே எடுத்துக்காட்டுகிறது.

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கப்போவதில்லை. விடுதலைப்புலிகளுடன் பின்னின்று தமிழ் மக்கள் விடுதலைக்காகப் போராடி வெற்றியீட்டுவதைத் தவிர வேறுவழியில்லை. பல தடவைகள் கடிதமெழுதியும் அப்பாவித் தமிழர்களை விடுதலை செய்யவில்லையே என்று ஆதங்கப்படும் ஆனந்தசங்கரியார் இனியாவது தமிழீழ விடுதலைப் புலிகளால்தான் தமிழ் மக்கள் விடுதலை பெறமுடியுமென்பதை உரத்துச்சொல்லிப் போராட முன்வரவேண்டாமா?


எந்தப் பேரழிவு வந்தாலும் இலங்கையில் தமிழ் இனத்துக்கெதிரான குரோதத்தைச் சிங்களம் கைவிடாதென்பதை உணர்ந்து கொண்டால் போதும். இதையே நண்பருக்குச் சொல்கிறேன்.

அரசியல் கட்டுரை...

கே.ரீ.கணேசலிங்கம்

# ஜனாதிபதி நாற்காலியை நோக்கி காய் நகர்த்தும் ரணில்

சுனாமிக்குப் பிந்திய இலங்கை அரசியலைக் கருத்திற்கொள்ளும் எவரும் இலகுவாகப் பல மதிப்பீடுகளை முன்வைத்து விடுகின்றனர். சுனாமியால் அதிகமான நெருக்கடியைச் சந்தித்த கட்சியாகவும், தலைவராகவும் ஐக்கிய தேசியக் கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவுமே



காணப்படுவதாக விமர்சனங்கள் எழுந்தன. சுனாமியின் ஆரம்ப கட்டத்தில் அத்தகைய போக்கை உள்நாட்டு ஊடகங்கள் மட்டுமல்ல, பிராந்திய ஊடகங்களும் கருத்துக் கூறின. ஆனால் இன்றைய சூழலில் அத்தகைய அளவீடு மாறுபட்ட விதத்திலும், சில அரசியல் கட்சிகளுக்கும், உரித்தானதாக மாறிவிட்டது. அதனை விரிவாகப் பார்ப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயத்தின் போது, கடந்தவாரத்தில் லண்டனுக்குப் பயணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. அவரது ஐரோப்பிய விஜயம் சுனாமிக்குப் பின்பான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கான ஏற்பாடாகவும், நிதி உதவிகளை மேலும் தேடுவதற்கான நடவடிக்கையாகவும் அமைந்தது.

அண்மையில் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளை இலங்கையில் சந்தித்தபோதும்கூட, சுனாமிக்குப் பிந்திய இலங்கை பொருளாதாரத்துக்கான உதவிகளையே அதிகம் ரணில் கோரியிருந்தார். இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதில் ஆளும்தரப்பைவிட, எதிர்த் தரப்புக்கு அதிக அக்கறை உள்ளது போல் ரணில் காட்டிக்கொண்டார்.

மேலும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுக்கு ஆளும் கட்சியை விட, எதிர்க்கட்சியினர் அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். இது ஐரோப்பிய யூனியன் பக்கம் செல்வாக்கைப் பெறுவது மட்டுமல்ல,



இலங்கையை மீளக்கட்டமைப்பு செய்வதில் எதிர்க்கட்சியின் பங்கையும் காட்டவேண்டுமென ரணில் கருதியிருந்தார்.

அத்தகைய முயற்சியின் தொடர்ச்சியாகவே ரணிலின் தற்போதைய ஐரோப்பிய விஜயத்துக்கான திட்டமிடலும் அமைந்துள்ளது. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இலங்கை அரசியலிலும், பொருளாதார அடித்தளத்திலுமே தற்போதைய கூட்டு அரசாங்கம் செயற்படுகிறது.

ஒன்று புரிந்துணர்வு உடன்படிக்கையானது - ரணில் அரசால் மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயமான நகர்வு. அதனோடு ஐரோப்பிய, அமெரிக்க, ஜப்பானிய தரப்பை உதவிக்கும், ஒத்துழைப்புக்காகவும் அழைத்து, தென்னிலங்கையின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய திட்டமிட்டிருந்தார்.

அத்தகைய ரணிலின் திட்டங்களை, சிங்கள மக்கள் மத்தியில் திரிபுபடுத்தி பிரசாரம் செய்த தற்போதைய ஆளும் தரப்பு - உறுதியான ஆட்சியைப் பிடிக்க வழி வகுத்துக் கொண்டது. அத்தகைய உறுதியான ஆட்சி சர்வதேச மட்டத்தில் ஆதரவுச் சக்திகளை ஆரம்பத்தில் விமர்சித்தாலும், சுனாமிக்குப் பின்னர் அவை தவிர்க்கமுடியாத ஒத்துழைப்புக்களாகிவிட்டன.

அமெரிக்கத் தரப்பின் உதவிகளையே நிராகரித்த ஜே.வி.பியினர் அமெரிக்கப் படைகளின் வருகையைக்கூட எதிர்க்கவோ, நிராகரிக்கவோ முடியாதநிலை ஏற்பட்டுவிட்டது. அவர்களுக்கு நன்றி செலுத்தும் நிலைக்கு சுனாமி மாற்றியதோ இல்லையோ - ஜே.வி.பி போன்ற சிங்கள தீவிரவாத அமைப்புக்கள் மாறிவிட்டனர். இந்த மாறுதலுக்குரிய அடிப்படையை அல்லது இந்தச் சூழலுக்கான நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் மேற்குலகத்தின் உதவிக்கு மூலகாரணமானவர் ரணில் விக்கிரமசிங்கவே.

ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரத்திலிருந்து, மேற்குலக சார்புடைய வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துக்கொண்டாலும், ரணில் அதில் முன்னோடியான தந்திரசாலியான தலைவராக விளங்கினார். இன்றைய இலங்கையின் நகர்வுக்கு ரணிலின் வெளிநாட்டுக்கொள்கையும் ஒரு காரணமாகும். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியும், ரணிலின் தலைமையையும் பலவீனமாக மதிப்பிடுவது தவறான முடிவுகளைத் தரக்கூடியதாக அமைந்துவிடும்.

இதனை விரிவாகப் புரிந்து கொள்ள இன்னொரு சம்பவத்தை நோக்குவோம்.

சுனாமிக்குப் பிந்திய அரசியல் மாற்றங்களால் ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி உறவு விரிசலடையத் தொடங்கிவிட்டது. அவர்களது உடனபாடு ஓராண்டைத் தாண்டும்போதே நெருக்கடியை சந்தித்துவிட்டது.

ஜே.வி.பியின் பிரதான தலைவர்களில் ஒருவரான சோமவன்ச நாட்டை விட்டு வெளியேறிவிட்டதான தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில் ஜே.வி.பி - சுதந்திரக் கட்சிக் கூட்டு, உடையும் இறுதிக்கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது.

தற்போது சுதந்திரக் கட்சியை விட ஜே.வி.பியே அதிக விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டு வருகிறது. காரணம் - ஜே.வி.பியின் இரட்டை முகம் படிப்படியாகவும், வேகமாகவும் மக்களுக்கு அம்பலப்படுத்துவதில் ஐ.தே.கட்சி அதிக கவனம் கொண்டிருக்கிறது.

தற்போதுகூட சுனாமி தொடர்பான மீள்கட்டமைப்புப் பற்றி ஜே.வி.பி நாடாளுமன்றத்தில் மௌனம் சாதிக்கப்போவதாக வீரவன்ச அறிவித்துள்ளார்.

இவ்வாறு ஜே.வி.பி- சுதந்திரக் கட்சிக் கூட்டுக்குள் குழப்பம் ஏற்படவும் ஜே.வி.பிக்குத் தனித்துவமான சிக்கல் ஏற்படவும் அடிப்படையில் ஐ.தே.கவும் அதன் தலைமையும் ஒரு காரணமாகும். ஜனாதிபதியுடன் அதிக விட்டுக் கொடுப்பைச் செய்துவரும் ரணில் விக்கிரமசிங்க அதன் மூலமே ஜே.வி.பியை ஆளும் தரப்பிலிருந்து வெளியேற்றலாமெனக் கருதுகிறது. ஏறக்குறைய அதற்கான வேலைத்திட்டத்தையே ரணில் மேற்கொண்டிருக்கிறார்.

சுனாமியின் காரணமாக ஒத்துழைக்க ஆரம்பித்துள்ள ஐ.தே.க- அடிப்படை அரசியல் வடிவத்தையும் தகர்க்க ஆரம்பித்துவிட்டது. சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. உறவு உடையும் பட்சத்திலேயே அடுத்த தேர்தலை ஐ.தே.க தனக்குச் சாதகமாக மாற்றலாமெனக் கருதுகிறது. அதையும்விட இன்னோர் திட்டத்தையும் ரணில் உருவாக்கியுள்ளார். ஜனாதிபதி அடுத்த தேர்தலை நடத்தாது இழுத்தடிப்பதோ அல்லது பலரும் கருதுவதுபோல் ஜனாதிபதி அரசியல் அமைப்பைத் திருத்திப் பிரதமராக ஆட்சிப் பொறுப்புக்குள் அமர முயற்சிப்பதையும் ரணில் தகர்த்துவிட்டார். அதாவது - ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய என்பவற்றுடன் இணைந்து ஒரு தெளிவான மாறுதலுக்குள் ஜனாதிபதி செல்லும் வாய்ப்பு இருந்தது. குறைந்தது மக்கள் அபிப்பிராயத்தின் மூலமான மாற்றத்தையேனும் ஏற்படுத்தலாமென இருந்த சூழலை ரணில் தகர்த்துவிட்டார். ஜே.வி.பியை சுதந்திரக் கட்சியிலிருந்து உடைக்க எடுத்த முயற்சி பலித்துவிட்டது.

சில சந்தர்ப்பங்களில் ஜே.வி.பி சுதந்திரக்கட்சி கூட்டு மீளவும் ஒட்டப்பட்டாலும், ஜே.வி.பியின் செல்வாக்குப் படிப்படியாகத் தகர்ந்துவிட்டது. மக்கள் ஜே.வி.பி பக்கமிருந்து சுதந்திரக் கட்சியின் பக்கமோ, ஐ.தே.கட்சி பக்கமோ மாறும்நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால் உடைந்தாலும், உறவு மீள ஒட்டப்பட்டாலும் ரணிலுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இலாபமானதாகவே அமையும். ஏனெனில் பாரம்பரிய அரசியல் கட்சிகள் இரண்டுமே ஜே.வி. பியின் அதீத வளர்ச்சியை ஏறகத் தயாரில்லை என்பது ஆளும் தரப் பின அண்மைய சம்பவங்கள் தெளி வாகக் காணக்கூடியதாகும்.

சுனாமியின் தாக்கம் ஜே.வி.பியையும் தாக்கத்துக்குள்ளாக்கிவிட்டது. மாறாக ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்ட நடவடிக்கைகளை ஒத்திவைத்தாலும், மறுபக்கம் அதிக அறுவடைகளை ஐ.தே.கட்சி சாதித்துள்ளது. கட்சியைவிட்டு வெளியேறத் திட்டமிட்ட உறுப்பினர்களுக்கு நம்பிக்கையும், வலுவும் மீளக் கிடைத்துள்ளது. சுனாமிக்கு முன்பிருந்த போக்கை ரணில் மாற்றிவிட்டார். அதனால் கட்சிக்குள்ளும், தனிப்பட்ட ரீதியிலும் ரணில் விக்கிரமசிங்கவினது அறுவடை அதிகமானதாகவேயுள்ளது.

எனவே ரணிலைத் தவறாக கணக்குப் போடாது, யதார்த்தத்தைச் சரிவர அளவீடு செய்தால், சிறப்பானது. ரணில் - ஜனாதிபதி ஆசனத்தையே இலக்கு வைத்து நகர்ந்து செல்கிறார். அதற்கான காத்திருப்பும், நிதானமும் அவரது செயலில் காணப்படுகிறது.

பகுதி – 36

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

இந்த முகாமில எவ்வளவுபேர் இருக்கினம்?

'இஞ்ச ஆயிரத்து அறுநூறு பேருக்குக் கிட்ட இருக்காங்க. நானூத்து எண்பத்தொரு குடும்பங்கள் இருக்கும்.

'இவைக்குரிய சாமான்கள் கிடைக்குதா?'

சாமான்கள் D.S Office ஆலயும் கிடைக்குது. நிறுவனங்களும் குடுக்குது'

'எந்த நிறுவனம்'

'K.P,N,DU'

'அவை என்ன குடுக்கினம்'

'மரக்கறி துடக்கம் எல்லாச் சாமானும் குடுக்கினம். ஒக்ஸ்பாம் தண்ணி உதவி செய்யறாங்க. வேறயும் சில நிறுவனங்கள் அடிக்கடி வருது. உதவிகள் கிடைக்குது.

'இவையின்ர மீளகுடியேற்றம் சம்பந்தமா முடிவு என்ன?'

இதில மூண்டு GS Division ஆக்கள் இருக்காங்க. பாம் கொலனி, பரம்பமடு மாங்கேணி தெற்கு எண்டு இதில மக்கள் கேட்டு, இதில மக்கள் பாம் கொலனிக்குப் பின்னாலை ஒரு இடம் தெரிவு செய்திருக்காங்க. காணியும் அளந்திருக்காங்க.

இன்றும் கொஞ்சப் பேர் ரெண்டாம் கட்டை எண்ட இடத்தில போய் இருக்காங்க. வீடு கட்டிக் குடுக்கிறதா இன்னம் திட்டம் வரல. காணி அளந்து குடுத்திருக்காங்க. முககியமான பிரச்சினையா இருக்கு. சாமானுகள் குடுத்தாலும், தொழில் எண்டது கஷ்டமாத்தான் இருக்கு. இங்க சரியா கஷ்டப்பட்டு சனங்கள் இப்ப ஒண்டுமே இல்ல. கடலத்தான் நம்பி இருந்ததுகள். அனுபவமும் குறைவு நேரடியா கடலைக்கண்டு பாதிக்கப்பட்டதால அந்த இடத்துக்குப் போக விருப்பம் இல்ல. இவங்களப் போல ஆக்களுக்கு நிறுவனங்கள் நிறைய உதவி செய்தால் நல்லது.

சமுர்த்தி அலுவலருடனான உரையாடலை முடித்து, இறுதியாக மீனவர் சங்கத்தலைவர் சௌந்தரராஜன் (வயது 38) என்பவரைச் சந்தித்தேன். அவருடனான உரையாடல் இது.

'உங்கட குடும்பத்தில ஆராவது ...?'

'அம்மா'

'அவ என்னொன்டு அம்புட்டவா?'

'அவ கடற்கரைக்கு வள்ளம் இழுக்கத்தான் போறவ '

அவ தங்கச்சியோட தான் இருந்தவ'

'நீங்கள் என்னொண்டு தப்பினீங்கள்.'

'அண்டு எனக்குப் பிறந்தநாள். அதுககாகப் பங்குக்காசு குடுத்திட்டு நேரத்தோட வீட்டை வந்திட்டன். என்ட சினேகிதன் ஒருத்தனும் வர, மூத்த மகள் தேத்தண்ணி தந்தாவு. சிலவேளை அதில வரலாம். இப்ப இருக்கிற இடத்தில இருக்கேலாது. கடல் கிட்ட எண்டபடியால இப்ப தொழில் தான் நான குடிச்சிட்டு இருக்க வெடி மாதிரி சத்தம் கேட்டுது. பாக்கு தென்ன மரம் மட்டும் அலை எழும்புது - அதோட கடல் கொந்தளிக்குதெண்டு எல்லாரும் ஓடினது தான். '

'உங்கட ஊரில எல்லாமா எத்தினைபேர் இழப்பு'

எங்கட ஊரில எல்லாமா பதினொரு பேர், இதில ரெண்டு குமர்ப் பிள்ளைகள் மற்றவை எல்லாம் வயது கூடினாக்கள்'

'இங்க வசதிகள் எல்லாம் எப்பிடி?'

'தண்ணி ஒக்ஸ்பாம் குடுக்குது. கிணத்துத் தண்ணி U.N.H.C.R துப்பரவு பண்ணினது.

எங்கட கடற்கரைப் பக்கம் தான் பிரச்சினை. றோட்டுக்கு இங்கால பிரச்சினையில்ல, கடற்கரைப் பக்கம்தான் போட், வலை, உடைமை, எண்டு இழப்பு. ஒரு சிலர் இங்கால இருந்தவைக்கும் போட் வலை இருந்தது, கடற்கரைப் பக்கம் தான் வீடுகள் சேதம்.

அதோட இப்ப களவு - அதாலயும் சனத்துக்கு இழப்பு.

நான் கூட எங்கட அம்மாட சாவ எதிர்பாக்கேல்ல. வந்ததும் மீனை வச்சதும் பிள்ளகளைத் தூக்கினதும், தங்கச்சிட பிள்ளைகளைத் தூக்கினதும் ஓடினதும் தான். மற்றவனும் அதே மாதிரி ஓடினதுதான். ஓடிப்போய் கிரிமிச்சையில விட்டுப் போட்டுத் தான் வந்து, தான் அம்மாட பொடிய எடுத்து வீட்டுக்கு கொண்டு போய் வச்சிட்டு கிரிமிச்சைக்கு வியளம் அனுப்பினது பிள்ளைகளை வரச் சொல்லி.

அப்ப பொலிஸ் வந்து வாழைச் சேனைக்குக் கொண்டு போகோணும்- போஸ் மோட்டம் பண்ணோணுமெண்டு அப்ப நாங்கள் சொன்னம்- போஸ் மோட்டம் பண்ணத் தேவையில்லை. உண்மையில தண்ணில தான் அடிபட்டது எண்டு சொல்ல, அப்பிடியில்ல எண்டு பொலிஸ் சொன்னதால வாழைச்சேனைக்கு கொண்டு போனது. அங்கதான் அடக்கம் செய்யுறது'.

'அவட பேர் என்ன?'

'தவமணி சித்திரவேல்'

'நீங்கள் எந்தப் பிரிவுக்கு தலைவரா இருக்கிறீர்கள்?'

'மாங்கேணி தெற்கு, மாங்கேணி மத்தி, பாம்கொலனி இந்த மூண்டு கிராம சேவகர் பிரிவு மீனவர் சங்கத்துக்கும்.

'நான் தான் தலைவரா இருக்கிறன்'.

'உங்களுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது.'

'இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா இழப்பு ஏற்பட்டிருக்கு. வள்ளம், வலைகள் வீட்டுப் பொருட்கள் எல்லாம் சேத்தா மொத்தமா வரும். போட் எனக்கிட்ட இருக்கல்ல'

அவரிடமிருந்தும் மாங்கேணியில் நான் சந்தித்த அனைவரிடமிருந்தும் விடைபெற்று வந்தேன்.

அம்பாறை மாவட்டத்திலும். மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு மட்டக்களப்பு தொகுதியிலும் பார்த்த அளவில் அங்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் பணிகள் சிறப்பாக இருந்தன.

கல்குடா தொகுதியில் இதுவரை பார்த்த அளவில் இன்னும் கூடுதலாக TRO பணியாற்றியிருக்கலாம் என்ற உணர்வு ஏற்பட்டது. இதையே என்னோடகூட வந்தவர்களும் தெரிவித்தனர்.

சுனாமி அனர்த்தமானது - இந்த இயல்பில் பெரும்மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக சுனாமி அலையைக் கண்ட குழந்தைகளை குளிக்க வைப்பதே மிகவும் சிரம மாக இருப்பதாக பலரும் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

மட்டு - சிலா முனையிலுள்ள கிறிஸ்தவ மதப் பிரிவொன்றின் தேவாலயமொன்றில் தப்பிய அந்த தேவாலயப் போதகரின் பிள்ளையின் நிலையும் இதுதான். (தொடரும்...)

## தவக்கால நற்சிந்தனை

"நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை" (லூக் 5:31)



ஆழமான கருத்துரைகளை வழங்கும் ஒரு துறவியின் குரு மடத்தில், அவரது சிந்தனைகளால் கவரப்பட்ட சில இளைஞர்கள் சேர்ந்தனர். அவர்களுக்குப் பலவிதமான பயிற்சிகளையும் அளித்துவந்தார். அந்த இளைஞர்களில் ஒருவன், ஒருநாள் ஒருபொருளைத் திருடிவிட்டான். இதுபற்றித் துறவியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அவரோ ஒன்றுமே கண்டுகொள்ளாதவர்போல் இருந்துவிட்டார். மீண் டும். அவன் ஒரு பொருளைத் திருடினான். துறவியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஏனைய இளைஞர்கள் இந்தமுறை இவன் தண்டிக்கப்படலாம் என எதிர்பார்த்தனர். இந்த முறையும் எதுவுமே நடக்கவில்லை. எனவே அவர்கள் துறவிக்கு நல்லவர்களாகிய எங்கள் மத்தியில் இவன் இருந்தால், நாங்களும் கெட்டுவிடுவோம். எனவே இவனை மடத்தைவிட்டு நீக்கவேண்டும். அல்லது நாங்கள் நீங்குகிறோம் என்றனர். அதற்கு அந்தத் துறவி நீங்கள் நல்லவர்கள். நீங்கள் விரும்பியவாறே செய்யலாம். ஆனால் திருடும் புழக்கமுள்ள இவனுக்கு என் அறிவுரையும், பரிவும், அன்பும் வேண்டும். இவன் நோயுள்ளவன். இவனுக்கு என் மருத்துவம் தேவை என்றார். ஆம். கிறிஸ்துவும் நோயுற்றவர்களை, பாவிகளையே தேடிவந்தார்.

= மோ.தார்சீசியஸ் =

# இஸ்ரேல் மீதான தாக்குதலையடுத்து 3 பலஸ்தீன தளபதிகள் பதவிநீக்கம்!

## ஜனாதிபதி அபாஸ் அதிரடி நடவடிக்கை



(காஸா)

இஸ்ரேலியக் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலையடுத்து. பலஸ்தீனப் படைகளின் மூன்று தளபதிகளை, ஜனாதிபதி மொகமட் அபாஸ் பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

இஸ்ரேலுடனான யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்த பின்னர் ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலியக் குடியிருப்புக்கள் மீது சரமாரியான மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

சுமார் 30 ரொக்கட் குண்டுகள் யூதக் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்ததையடுத்தே பலஸ்தீன ஜனாதிபதி மொகமட் அபாஸ் இந்த நடவடிக்கையை எடுத்தார்.

ஜெனரல் அப்துல் ரஷீத் மஜய்டீ மற்றும் தேசிய பொலிஸ் தலைவர் சஜீப் அல் - அஜீஸ் உட்பட்ட மூன்று முக்கிய தளபதிகளே பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தம் மீதான தாக்குதல்களை போர்நிறுத்த உடன்பாட்டுக்கமைய நிறுத்துவதற்குத் தவ றும் பட்சத்தில், தாம் பலஸ்தீனப் போராளிகள் மீதான தாக்குதலைத் தொடுக்க நேரிடும் என்று மொகமட் அபாஸுக்கு இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை. இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து பேணப்படும் என்று மொகமட் அபாஸ் தெரிவித்துள்ளார்

யூதக் குடியிருப்புக்கள் மீதான தாக்குதல்களை அடுத்து போராளிக் குழுக்களின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே அவர் இவ்வாறு அறிவித்தார்.

இதேவேளை, அப்பாஸ் அதிகாரத்தைக் கையிலெடுத்து உடன்டி நடவடிக்கைகளை எடுத்தமைக்காக இஸ்ரேல் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.




# அமெரிக்க பாதுகாப்பு செயலர் ஈராக்கிற்குத் திடீர் விஜயம்!




அமெரிக்க பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கின் வடபகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் ஈராக் படையினரின் பயிற்சி தொடர்பாக அறிந்துகொண்டதுடன், அமெரிக்க படை அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

அங்கு செல்ல முன்னர் ரம்ஸ் பீல்ட், மொசூல் நகருக்கு எவ்வித முன்னறிவித்தலுமின்றி சென்று காயமடைந்த அமெரிக்கப் படையினரைப் பார்வையிட்டார்.

கடந்த வாரம் ஈராக்கில் இடம் பெற்ற தேர்தலில் கடமையைத் திறம்படச் செய்தமைக்காக அமெரிக்க மற்றும் ஈராக் படையினருக்கு நன்றி தெரிவிக்குமுகமாகவே பாதுகாப்பு செயலர் ஈராக் சென்றுள்ளதாகப் பென்ரகன் பேச்சாளர் லோறன்ஸ் டி றிற்றா தெரிவித்தார்.

மொசூலிலுள்ள ஈராக்கிய படை அதிகாரிகளைச் சந்தித்த ரம்ஸ்பீல்ட் தேர்தல் காலத்தில் அவர்களுடைய பணி தொடர்பாகவும் கேட்டறிந்தார். ஈராக்கை சிறந்த நாடாக மாற்றுவதற்கு நம்பிக்கை வைத்துள்ளோம். ஈராக் மக்கள் இதனைச் சிறந்த நாடாக மாற்றுவார்கள் எனவும் அவர் படை அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

கடந்த மாதம் ஈராக்கில் தேர்தல் நடைபெற்ற பின்னர், அங்கு முதல் சென்ற அமெரிக்காவின் உயர் அதிகாரி ரம்ஸ் பீல்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக் பயணத்தை முடித்துக் கொண்டு ரம்ஸ் பீல்ட் அங்கிருந்து பிரான்ஸுக்குச் சென்று நேட்டோ பாதுகாப்பு அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

இதேவேளை, ஈராக்கில் இடம் பெற்ற தேர்தலின் முடிவுகள் அடுத்த சில தினங்களில் வெளிவரமாட்டாதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குக் காரணம் 300 தேர்தல் வாக்குப் பெட்டிகளின் வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டியுள்ளதனாலேயே தேர்தல் முடிவுகள் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பகட்ட தேர்தல் முடிவுகளின் படி, ஷியா முஸ்லிம்களின் ஈராக்கிய முன்னணி முதலிடத்திலும், குர்திஷ் கட்சிகளின் கூட்டணி இரண்டாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஈராக் தலைநகரில்

## பேக்கரி மீது தாக்குதல்; 9 பேர் பலி!

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் கிழக்குப்பகுதியிலுள்ள பேக்கரி ஒன்றின் மீது முகமூடி அணிந்த கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தொிவித்தனர்.

இரண்டு கார்களில் வந்த முகமூடி அணிந்த கிளர்ச்சிவாதிகள், பேக்கரியின் முன்நின்ற வாடிக்கையாளர்கள் மீது கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இந்த 9 பேரும் உயிரிழந்தனர்.

சம்பவ இடத்தில் ஏழு பேரும் இருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கான காரணம் என்னவென்பது தெரியவரவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

# திருப்பாச்சி படத்தைத் திரையிட உயர்நீதிமன்று இடைக்காலத் தடை

(புதுடெல்கி)

வில்லன் வாயில் பூச்சி மருந்தை ஊற்றி, சாகடிக்கும் காட்சிகளுடன் நடிகர் விஜய் மற்றும் திரிஷா நடித்த திருப்பாச்சி படத்தைத் திரையிடுவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

கோத்ரெஜ் சாரா லீ லிமிட்டெட் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது -

சூப்பர் குட் பிலிம் நிறுவனம் திருப்பாச்சி படத்தை தயாரித்துள்ளது. இந்தப் படம் சமீபத்தில் வெளிவந்து தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருக்கிறது. எங்கள் நிறுவனம் 'ஹிட்' 'குட் நைட்' போன்றவற்றை - கொசு, கரப்பான் பூச்சிகளை ஒழிப்பதற்காக தயாரித்து வருகிறது.

திருப்பாச்சி படத்தில் எங்கள் தயாரிப்புப் பொருளை - படத்தின் கதாநாயகனான நடிகர் விஜய் பயன்படுத்தும் காட்சி இடம்பெற்றுள்ளது. வில்லன் வாயில் 'ஹிட்' மருந்தை ஸ்பிறே செய்து விடுகிறார். இதனால் வில்லன் இறந்துவிடுகிறார்.

இது மட்டுமல்லாமல் - "இது பூச்சி மருந்து மட்டுமல்ல (பெண் வயிற்று) கருவில் உள்ள குழந்தையையும் கலைத்துவிடும்'' என்று கூறும் வசனமும் படத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹிட் மருந்து பூச்சிகளை அழிக்கவும் தயாரிக்கப்படுகிறது. ஆனால் எங்கள் தயாரிப்புக்குக் அவப் பெயர் ஏற்படுத்தும் வகையில் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, 'ஹிட்' பூச்சி கொல்லி மருந்து இடம்பெறும் வகையில் உள்ள காட்சிகளை நீக்குமாறு நீதிமன்றம் உத்தரவிடவேண்டும். அதுவரை திருப்பாச்சி படத்தைத் திரையிட தடை விதிக்கவேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை நீதிபதி ஆர்.பாலசுப்பிரமணியன் விசாரணைக்கு அனுமதித்தார். ஹிட் மருந்து படக் காட்சிகளுடன் திருப்பாச்சி படத்தைத் திரையிடுவதற்கு நீதிபதி இடைக்கால தடை விதித்தார்.

இந்த மனு மீண்டும் எதிர்வரும் 21 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது.

### பாகிஸ்தான் தெற்கு மாகாணத்தில்

# கடும்மழை, பனிப் பொழிவால் 40 பேருக்கு மேல் உயிரிழப்பு!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தென்பகுதி மாகாணத்தில் பெய்துவரும் கடும் மழை, அதனாலேற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் பனிப் பொழிவினால் பலர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இவற்றைவிட கடும் மழை காரணமாக குளமொன்று உடைப்பெடுத்ததால் 22 பேர் பலியாகினர். இவற்றைவிட இந்தப் பகுதியில் பல இடங்களில் ஏற்பட்ட மண் சரிவினால் 20 பேர் வரை உயிரிழந்தனர்.

கடந்த இரு வாரமாக இங்கு பெய்துவரும் கடும் மழை மற்றும் பனிப் பொழிவு காரணமாக நிலச்சரிவு மற்றும் பனிப் பாறைகளின் உடைவு என்பன ஏற்பட்டன. இதனால் அங்கு போக்குவரத்துக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் கடும்மழை ஏற்பட்டதனால் சதிகோர் என்ற குளம் உடைப்பெடுத்ததாகவும், இதனால் பல கிராமங்கள் மற்றும் நகரம் என்பன வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தென்மாகாண முதலமைச்சர் சேஜான் பலூக் தெரிவிக்கையில் -

குளம் உடைப்பெடுத்ததனால் சுமார் 5 ஆயிரம் மக்கள் குடியிருப்புக்கள்வரை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் சுமார் 30 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த வெள்ளப்பெருக்கினால் பெருமளவு மக்கள் காயமடைந்து நிர்க்கதியான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பல பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டு விட்டதாகவும், இதில் தென்பகுதி நகருக்கான பிரதான வீதியில் பாலங்கள் பல உடைக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபகுதியில் கார் மற்றும் பஸ்களில் பயணம் செய்த 30 பயணிகளைக் காணவில்லையெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அனர்த்தத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கு படையினர் அழைக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் மூழ்கியுள்ளவர்களில் சுமார் 1200 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் முதாசீர் பட் தெரிவித்தார்.

# குளோனிங் முறையில் மனித கருவை உருவாக்க இங்கிலாந்து அரசு அனுமதி!



ஆண் இல்லாமலேயே குழந்தையை உருவாக்க முடியும் என்பதும், ஒரு நபரைப் போலவே இன்னொருவரை உருவாக்கமுடியும் என்பதுதான் குளோனிங் முறையின் சாதனையாகும்.

இந்தக் குளோனிங் சோதனை இதுவரை மனித இனத்தில் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆடு மாடு, பூனை போன்ற விலங்கினங்களில் தான் குளோனிங் உயிரினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் முதன் முதலாக உருவானதுதான் டோலி ஆடு.

இங்கிலாந்து நாட்டின் எடின்பர்க்நகரில் உள்ள ரோஸ்லின் ஆய்வு மைய விஞ்ஞானி இயான் வில்மட் என்பவர்தான் குளோனிங் மூலம் டோலி ஆட்டை உருவாக்கினார். உலகம் முழுவதும் இந்தச் சாதனை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

விலங்கினத்தைத் தொடர்ந்து மனிதனையும் குளோனிங் மூலம் உருவாக்க விஞ்ஞானிகள் முயன்றபோது, அமெரிக்கா உள்பட பல நாடுகளில் கடும் எதிர்ப்பு நிலவியது. இயற்கைக்கு மாறாக மனித உயிரை உருவாக்குவது குற்றம் என்றும் எதிர்காலத்தில் பலவிதமான விபரீதங்களை அது ஏற்படுத்திவிடும் என்று பலர் அச்சம் தெரிவித்தனர். அதனால் மனித குளோனிங் சோதனைக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் குளோனிங் பிரச்சினையில் சில நாட்களுக்கு முன்னர், ஒரு அதிரடித் திருப்பம் ஏற்பட்டது. குளோனிங் மூலம் மனித கருவை உருவாக்க இங்கிலாந்து அரசு சட்டபூர்வமாக அனுமதி வழங்கியது. டோலி ஆட்டுக் குட்டியை உருவாக்கிய விஞ்ஞானி இயான் வில்மட் மற்றும் லண்டன் கிங்ஸ் கல்லூரி விஞ்ஞானிகள் இந்த அனுமதியைப் பெற்றுள்ளனர்.

ஆனால், இந்த அனுமதியின் மூலம் அவர்கள் குளோனிங் மனிதனை உருவாக்க முடியாது அதற்கு அனுமதி இல்லை. குளோனிங் - மனித கருவை மட்டுமே உருவாக்க முடியும். அந்த கருவை வைத்து மனிதனின் நோய்களைக் குணமாக்க ஆய்வு நடத்த மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கௌசல்யனின் படுகொலை சமாதான முயற்சியை பாதிக்கும்!

## சர்வதேச மனிதஉரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்டதை சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

இந்தப் படுகொலைச் சம்பவம் நடைமுறையிலுள்ள சமாதான முயற்சிகளைப் பாதிக்கக்கூடியதாகும்.

அரசியல் மயப்படுத்தப்பட்ட வன்முறைகள், நாட்டில் நிலவுகின்ற அமைதிச் சூழலைப் பாதிக்கும் நோக்கம் கொண்டவை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

# 75 000 ஆசிரியர்களுக்கு விரைவில் பதவி உயர்வு!

நாடு முழுவதிலுமுள்ள 75 ஆயிரம ஆசிரியர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகவும், இதற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆசிரியர்களுக்கான பதவியுயர்வு தொடர்பான சுற்றுநிருபங்கள் எதிர்வரும் ஒரு சில தினங்களில் வெளியிடப்படும்.

1994 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆம் திகதி வெளியான ஆசிரியர் சட்டமூலத்துக்கு அமைய சேவைக் காலம், கல்வித் தகைமை அடிப்படையில் இந்தப் பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவியுயர்கள் தொடர்பான சுற்றறிக்கை அடுத்த சில தினங்களில் வெளியிடப்படும்.

இதேவேளை அரசாங்க ஆசிரியர் நிர்வாகசேவைப் பிரிவுக்கு 80 பேர் புதிதாகச் சேர்க்கப்படவுள்ளனர். (01)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதம் நீடிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை 86 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 106 வாக்குகளும், எதிராக 20 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக ஜாதிகஹெல உறுமய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பி.இராதாகிருஷ்ணன் ஆகியோர் இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தி.மகேஸ்வரன், பி.இராதாகிருஷ்ணன் ஆகியோரைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

## குடாநாட்டில்..

வர்த்தகநிலையங்களை மூடி ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு யாழ். வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளது.

அவசரதேவைகளை நிறைவேற்றுவோரின் போக்குவரத்துக்கு பாதகம் ஏற்படாத வகையில் எதிர்ப்பினைத் தெரிவிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குடாநாட்டின் பல்வேறு பொது அமைப்புக்களும் ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவுகளை வழங்கியுள்ளன.

இதேவேளை நேற்றும் குடாநாட்டின் வீதிகளில் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டும் பொது இடங்களில் சோக கீதங்கள் இசைக்கப்பட்டும் வீதிகளில் வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்ததுடன் குடாநாடு சோகத்தில் மூழ்கியிருந்தது.

## வெலிக்கந்த படுகொலை...

நலிந்துபோயுள்ள உறவுகளை இப்படியான படுகொலைச் சம்பவங்கள் மேலும் வலுவிழக்கச் செய்துள்ளதுடன் சமாதான முயற்சிகளுக்கும் பேராபத்தை விளைவித்துள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வெளிநாடுகள் வாரி வழங்கியுள்ள உதவிகளை சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு பொதுக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு, புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டை இன்னமும் ஏற்படுத்தாததால், வெளிநாட்டு உதவிகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அரசு மேற்கொண்டுவரும் நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை சரியாகச் சென்றடையவில்லை. பாதிக்கப்பட்டோருக்காக நிவாரணமாக வழங்கப்படும் அரிசி போதாது. சிறுவர்களுக்கு வழங்கப்படும் உணவு நிறைவாக இல்லை. நிவாரணப் பொருட்களில் கோதுமை மா சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இலங்கைக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள 9,582 கோடி ரூபாவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமமாகப் பகிர்ந்தால், பாதிக்கப்பட்ட ஒருவர் ஒரு லட்சம் ரூபா பெறலாம். ஆனால், அரசு அதனைச் சரியாகச் செய்யுமா என்று ஜி.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பினார்.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 99.03 | 99.92 |
| ஸ்ரேலிங் பவுண் | 183.73 | 186.40 |
| யூரோ | 126.33 | 128.50 |
| சுவிஸ் பிராங் | 80.84 | 82.71 |
| யென் | 0.9337 | 0.9520 |

# மானிப்பாய் இந்துவிலிருந்து 15 ஆசிரியர்கள் ஒரேநேரத்தில் அதிகாரிகளால் இடமாற்றம்!

## தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இருந்து ஒரே நேரத்தில் 15 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த.மகாசிவம் கண்டித்திருப்பதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கத்திடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் நமது ஈழநாடுக்கு நேற்றிரவு தகவல் தருகையில் -

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் 15 ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப் பணிமனை கடந்த புதன்கிழமை திடீரென இடமாற்றக் கடிதங்களை அனுப்பியுள்ளது.

இடமாற்றச்சபையுடன் ஆலோசிக்காமல் ஒரேநேரத்தில் 15 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குவதுடன், கல்வி நிர்வாகச் செயற்பாடுகளையும் இது பாதிக்கும்.

எனவே, இந்த விடயத்தில் தலையிட்டு, இடமாற்றங்களை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஒரேநேரத்தில் 15 ஆசிரியர்களும் ஒரே பாடசாலையில் இருந்து இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்த அதிகாரிகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதனையடுத்து அவர் மேற்படி இடமாற்றங்கள் குறித்து மேன்முறையீடு செய்த ஆசிரியர்களின் இடமாற்றத்தை நிறுத்திவைக்கும்படியும், இவ்வாறு ஒரே நேரத்தில் 15 ஆசிரியர்களை இடமாற்றியமை குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார்.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் தமிழர் ஆசிரியர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்றும் மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

## வாகரையில் நேற்று அஞ்சலி நிகழ்வு

வெலிக்கந்தவில் வைத்து படுகொலை செய்யப்பட்ட மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளுக்கும் முன்னாள் எம்.பி. சந்திரநேருவுக்கும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று நேற்று வாகரையில் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு, வாகரைப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் காளி தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வாகரை பிரதேச கட்டளைத் தளபதி அறிவு ஏற்றினார். மாவீரர்களின் உருவப் படங்களுக்கான மலர் மாலையை திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் அணிவித்தார்.

தொடர்ந்து இந்த நிகழ்வில் வாகரை பிரதேச செயலர் மற்றும் திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் வீர வணக்க உரைகளை நிகழ்த்தினர்.

## பிரதமர்...

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசுடனும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த யசூசி அகாஷி - சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராய்வதில் கவனம் செலுத்தினார். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உதவிகளை வழங்குவதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடினார்.

# படுகொலையைக் கண்டித்து வாகரையில் ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் படுகொலையைக் கண்டித்து நேற்று மட்டக்களப்பு - வாகரைப் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

பனிச்சங்கேணி மற்றும் கதிரவெளி ஆகிய இரு இடங்களிலிருந்து நேற்றுக் காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணிகள் புறப்பட்டு வாகரைப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தன.

வாகரைப் பிரதேச செயலர் எம்.உதயகுமாரிடம் இது தொடர்பான மனுவை வாகரைப் பிரதேச வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கையளித்தது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்காகக் கையளிக்கப்பட்ட இந்த மனுவில், படுகொலைக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும் என்றும், இத்தகைய படுகொலைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

## மட்டு- அம்பாறை...

எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதிகள், பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர் என மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தயா மோகன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் 5 ஆம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட மார்ஷல், இதற்கு முன்னர் மட்டக்களப்பு - அம்பாறை தலைமைச் செயலக இணைப்பாளராகக் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ச்செல்..

குழுவின் வழித்துணையுடனும், இராணுவப் பாதுகாப்புடனும் இவர் மட்டக்களப்புக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்புக்கு சென்ற விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எதிர்வரும் திங்கட்கிழமைவரை அங்கேயே தங்கியிருப்பார் என்றும் -

இந்தக் காலப்பகுதியில் பல்வேறுதரப்பினருடனும் அவர் பேச்சுக்களை நடத்துவார் என்றும் கூறப்படுகிறது.

## மீண்டும்...

தைய அரசு, மக்களின் அபிலாஷைகளையும், அவர்களின் தேவைகளையும் தீர்க்கக்கூடிய ஒரு நிர்வாக அலகாகத் தெரியவில்லை. தமக்கு அனர்த்த நிவாரண நிதி கிடைக்கவில்லை என்று சுதந்திர தினத்தன்று சிங்கள மக்கள்கூட ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

இந்த அரசு புலிகளை எல்லா வழியிலும் தப்புக்கணக்கு போட்டு வைத்துள்ளது. புலிகளது தொடர்ச்சியான பொறுமையை, அவர்களது பலவீனம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது. அரசு ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். இனியொரு யுத்தம் நடக்குமானால் தமிழ்மக்கள் அனைவரும் தமிழீழம் கிடைக்கும்வரை போராடுவார்கள் என்று தெரிவித்தார். (01)

## ஆத்திரங்கொண்ட..

சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மேற்படி இளைஞன் கணினி வகுப்பை முடித்து விட்டு தென்னம் தோட்டப்பகுதி ஊடாக வந்து கொண்டிருந்த வேளை தேங்காய் ஒன்றை எடுத்து பொலிஸார் மேற்படி இளைஞனின் தலைமீது எறிந்தனர். தலையில் தேங்காய் மிகவும் பலமாகப்பட்டதில் இளைஞன் அவ்விடத்திலே மயக்கமடைந்தார்.

மயங்கிய இளைஞனின் ஆணுறுப்பை பொலிஸார் கூரிய ஆயுதம் கொண்டு கிழித்ததுடன் இரத்தப் பெருக்கு ஏற்பட்டதும் அதை கட்டுப்படுத்த முடியாத நிலையில் துணியினால் சுற்றி கட்டிவிட்டு கிணறு ஒன்றின் அருகில் கிடத்தி விட்டுத்தப்பிச் சென்றுள்ளனர்.

மயக்கம் தெளிந்த மேற்படி இளைஞனின் முனகல் சத்தம் கேட்ட பொதுமக்கள் சிலர் வைத்தியசாலைக்கு மேற்படி இளைஞனைக் கொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்று கோபமடைந்த தாழ்வுபாடு மக்கள் பொலிஸ் நிலையத்துக்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் பொலிஸ் நிலைய வாசலின்முன் ரயர்களைக் எரித்தனர். தொடர்ந்து பொலிசார் மக்களை அடக்கும் முயற்சியில் கண்ணீர்புகைக் குண்டு வீசியதுடன், ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர். இதனை அடுத்து மன்னார் பொலிஸ் நிலையத்தின் முன் பதற்றநிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், மன்னார் மாவட்ட ஆயரும், பொது அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. (மி)

DCM
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(இந்து குருகுலம் முன்பாக)
யாழ்.பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
B.Com- P I - PII
மீட்டல் வினா விடை வகுப்புக்கள்
ஆரம்பம்
13.02.05
சனி 6.15.(ப.நே)
(C/3812)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கண்ணிவெடி அகற்றும் பணிகள் புலோலிப் பகுதியில் ஆரம்பம்!

(வடமராட்சி)

வடமராட்சி - புலோலிப் பகுதியில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றியபோது வடமராட்சி - துன்னாலைப் பகுதியிலிருந்து கரையோரமான கற்கோவளம் வரை மண் அணைகளை அமைத்து கண்ணிவெடிககளைப் புதைத்திருந்தனர். இது பயிர்ச்செய்கைத் தோட்டங்கள், நெல் வயல்கள், வீடுகள், பனங்காணிகள் என்பவற்றை ஊடறுத்து இந்த மண் அணைகள் போடபட்டது.

இதனால் கடந்த 9 வருட காலமாக பயிர்ச்செய்கையாளர்கள், விவசாயிகள், சீவல் தொழிலாளர்கள் எனப் பலரும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி, தொழில் செய்ய முடியாத நிலையில் இருந்ததோடு, பல கால்நடைகளும் இந்தக் கண்ணிவெடிகளில் சிக்கி உயிரிழந்தன.

புற்றளை மகாவித்தியாலய மைதானத்துக்கு அருகாகச் செல்லும் மண் அணைகள் உள்ள பகுதியில் கண்ணிவெடி புதைக்கப்பட்ட பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

கண்ணிவெடி அபாயத்தால் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வதில் பெருஞ்சிரமங்களைக் எதிர்நோக்கிவருகின்றனர்.

இங்கு ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தைச் சேர்ந்த 6 பேர் கொண்ட குழு பணியில் ஈடுபட்டுள்ளது. இராணுவத்தால் கொடுக்கப்பட்ட வரைபடங்களை வைத்து கடந்த இரு வாரங்களாக இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை ஒரு கண்ணிவெடியை அகற்றியதாகவும், பல கண்ணிவெடிகளைக் கொண்ட ஆபத்தான பிரதேசமொன்றை இவர்கள் கண்டுபிடித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

(14)

### தனியார் விமான சேவைகள் இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

வெலிக்கந்த படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து யாழ். குடாநாட்டில் இன்று நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் முகமாக, கொழும்புக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நடைபெறும் தனியார் விமான சேவைகள் இன்று இடம்பெறமாட்டாது என பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு பிரதேச விளையாட்டு விழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுவிழா - நாளை மாலை 3 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ரீ.மாதுளன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

விளையாட்டு விழாவின் சிறப்பு நிகழ்வாக அன்றையதினம் மாலை 2.30 மணிக்கு நெடுந்தீவு - பற்றைக் காட்டுச் சந்தியிலிருந்து மாவீரர் நினைவுச்சுடர் வரை குதிரையோட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மைதான சுவட்டு நிகழ்வுகளாக ஆண் - பெண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 4x400 மீற்றர் அஞ்சல் மற்றும் பெண்களுக்கான குண்டெறிதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இடைவேளை நிகழ்வுகளாக நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி மாணவர்கள், நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் போன்றோரின் உடற்பயிற்சிக் கண்காட்சியும், இறுதியாக பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(113)

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது பருத்தித்துறை பகுதியில் அதிகரிப்பு!

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் உணவுச்சாலைகளிலும், தனியார் விற்பனை நிலையங்களிலும் 14 வயதுக்கும் குறைந்த பல சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதில் கூடுதலாக வறுமை நிலை காரணமாக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய சிறுவர்களே வேலை செய்து வருகின்றனர்.

தனியார் விற்பனை நிலையங்களில் வேலை புரியும் சிறுவர்கள் உரிமையாளர்களால் கீழ்த்தரமாக நடத்தப்படுவதாகவும், அதிக வேலைப்பளுவைச் சுமத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகால போர் அனர்த்தத்தின் போதும், சுனாமி அனர்த்தத்தின் போதும் குடும்ப உறுப்பினர்களை இழந்த சிறுவர்களே இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக வடமராட்சிப் பகுதியில் சிறுவர்களின் உரிமைகள் பறிக்கப்படும் சம்பவங்கள் பல இடம்பெற்று வருகின்றன.

எனவே இவ்வாறு வேலைக்கமர்த்தப்படும் சிறுவர்களை இனங்கண்டு, அவர்களின் எதிர்காலத்துக்கு நல்ல வழியைக் காட்ட வேண்டுமென சிறுவர் உரிமைகளைப் பேணும் அமைப்புக்களிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(14)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கெதிரான வன்முறையொழிப்பு வாரத்தை முன்னிட்டு பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்குழு நடத்திய இளம் படைப்பாளிகளுக்கான திறன் வெளிக்கொணர் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா - எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### வல்லிபுர ஆழ்வார் ஆலய வாராந்த நிகழ்வு

(புலோலி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை காலை 10.30 மணியளவில் "அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்து அரவணைப்பள்ளியானே" என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எஸ்.கே.என். தவராஜா சொற்பொழிவாற்றவுள்ளார்.

(14)

# செவிப்புலன் வலுவற்ற நபரை ஒரு வாரமாக காணவில்லை!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் இருந்த நபரொருவரை கடந்த ஒருவார காலமாகக் காணவில்லை என, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரியபுலம் - நாவற்காட்டைச் சேர்ந்த சாமித்தம்பி சசிகுமார் (வயது 28) என்பவரே காணாமற்போயுள்ளார்.

இவர் கடந்த 2 ஆம் திகதி செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் இருந்து மாலைவேளை புறப்பட்டதாகவும், இதுவரை இந்த நிறுவனத்துக்குத் திரும்பவில்லை எனவும் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன செயலாளர், யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நபர் தொடர்பாக யாராவது தகவல் அறிந்தால் - யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சுகாதார தொண்டர்களை கௌரவிக்கும் நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமி இயற்கை அனர்த்தத்தின் போது சுகாதார சேவையில் ஈடுபட்ட சுகாதாரத் தொண்டர்களை கௌரவிக்கும் நிகழ்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளதால், சுனாமி அனர்த்தத்தின் போது சுகாதார சேவையில் ஈடுபட்ட அனைத்துத் தொண்டர்களையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

# கடற்படையினரின் உதவியுடன் கற்பாறைகள் வெடிவைத்து தகர்ப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - மாவிலித்துறை முகப் பகுதியின் படகு ஓடுபாதையில் இருந்த கற்பாறைகள் கடற்படையினரின் உதவியுடன் நேற்று முன்தினம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டன.

நெடுந்தீவு போக்குவரத்தில் ஈடுபடும் படகுகளின் அடிப்பாகங்கள் அடிக்கடி சேதமடைந்து வந்ததன் காரணமாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக் டிறஞ்சனின் ஏற்பாட்டின்கீழ் இந்த பாறைகள் கடற்படையினரால் வெடி வைத்து உடைக்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று காரைநகர் கடற்படை அதிகாரி சீ.சி.வன்னியாராச்சி தலைமையிலான கடற்படைக் குழுவினர், பாறைகள் உள்ள இடங்களை அடையாளப்படுத்திச் சென்றனர்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிமுதல் பகல் 2.30 மணிவரை இந்தப் பாறை உடைக்கும் பணி இடம்பெற்றது. ரியர் அட்மிரல் பெர்னாண்டோவின் நேரடி வழிநடத்தலிலேயே இந்தப் பணி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டால் மாணவனுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் மாணவன் ஒருவன் புதிதாகச் சேர்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை என, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததையடுத்து, இந்தப் பாடசாலை அதிபருடன் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் கலந்துரையாடிய பின்னர் குறித்த மாணவன் பாடசாலையில் கற்வி கற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

க.மகேந்திரன் என்பவரே தனது மகனுக்குப் பாடசாலையில் அனுமதி வழங்கவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததையடுத்து, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபருடன் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் தொடர்புகொண்டபோது, குறிப்பிட்ட மாணவன் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியதன் காரணமாகவே மாணவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து மாணவன் - குறித்த ஆவணங்களைச் சமர்ப்பித்ததையடுத்து பாடசாலையில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்பதற்குத் தகுதியிருந்தும், பாடசாலை அனுமதிக்குப் பணம் போன்ற காரணங்களைக்காட்டி அனுமதி மறுக்கப்படின் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### விடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலை திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் ஈரானிய பெண் திரைப்பட நெறியாளர் மர்ஷியே மெஸ்கினி உருவாக்கிய "நான் பெரிய மனுஷியான நாள்" எனும் திரைப்படம் விடியோக் காட்சியாக ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசாவின் நெறிப்படுத்தலின்கீழ் காண்பித்த படம் குறித்த கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

### மணவாளக்கோல உற்சவம்

அளவெட்டி கணேஸ்வரம் ஆலயத்தின் மணவாளக்கோலம், தைசதுர்த்தி விழா என்பன இன்று காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி, விசேட பூசைகள் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.

அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

### கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம்-மாணவர் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் நயினாதீவு கணேசா மகா வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கனிஷ்ட மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும், தைத்த நீலக் காற்சட்டைகளையும் வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு ஓட்டுமடத்தில் உள்ள நிலையப் பணிமனையில் வைத்து பெப்ரவரி 4 ஆம் திகதி வழங்கப்பட்டன. இந்த உபகரணங்களைப் பெறத் தகுதி வாய்ந்த மாணவர்களைக் குறிப்பிட்ட பாடசாலை அதிபர்கள் தெரிவுசெய்து அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளானை கிராம அலுவலர் பணிமனை திறப்புவிழா!



(முள்ளானை)

முள்ளானை கூத்துமாலை ஸ்ரீ பாலவிநாயகர் ஆலயத் தொண்டர் சபைக் காரியாலயமும், கிராம அலுவலர் பணிமனைக்குமான கட்டடத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு ஜெகராசசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் அ.யோ.எழிலரசி கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம், முள்ளானை கிராம அலுவலர் ந.நாகராசா, வடலியடைப்பு கிராம அலுவலர் க.சுதர்சன், கனகசபை வித்தியாலய அதிபர் சிறிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கட்டடத்தை சண்டிலிப்பாய் உதவிப் பிரதேசசெயலர் அ.யோ.எழிலரசி திறந்துவைத்தார்.

(நி)

### சுனாமி கடற்கொந்தளிப்பில் உயிரிழந்த

# முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்களையும் நினைவுகூரும் நிகழ்வுகள் அனைத்து பகுதிகளிலும்

சுனாமி கடற்கொந்தளிப்பால் உயிரிழந்த முன்பள்ளிச் சிறார்களையும், முன்பள்ளி ஆசிரியர்களையும் நினைவுகூரும் முகமாக அனைத்துப் பிரதேசங்களிலும் கடந்த செவ்வாய்க்கிழமை அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிலாவத்தை பாடசாலையில் காலை 10 மணிக்கு முல்லைத்தீவு பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத் தலைவர் சுரேஸ்குமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை பங்குத்தந்தை சரா அடிகளார் ஏற்றி வைக்க, தேசியக்கொடியைக் கடற்புலிகளின் முல்லைத்தீவு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றிவைத்தார்.

உயிரிழந்த சிறார்களினதும், ஆசிரியர்களினதும் திருவுருவப் படங்களுக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு இணைப்பாளர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பலர் நினைவுச் சுடர்கள் ஏற்றி, மாலைகள் அணிவித்து, மலர் அஞ்சலி செலுத்தினர்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நினைவுகூரல் நிகழ்வில் - பொதுச்சுடரை இலங்கை பாதுகாப்பு நிதி அமைப்பின் தலைவர் பேரின்பநாதன், வடமராட்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் துரை சத்தியசீலன், மற்றும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் ஆகியோர் ஏற்றினர்.

உயிரிழந்தவர்களின் திருவுருவப் படங்களுக்கான நினைவுச் சுடர்களைப் பெற்றோர்கள் ஏற்றி வைத்து, மலர்மாலைகளையும் அணிவித்தனர். தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுரைகள் இடம்பெற்றன.

வவுனியா நகர்ப்புறத்திலுள்ள சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் காலை 10 மணிக்கு வவுனியா தெற்கு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசபாதம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் - நினைவுச் சுடர்களை முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிச் சிறார்கள் ஏற்றினர். நினைவுரைகளை சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் நா.சேனாதிராசா, செட்டிகுளம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுத் தலைவர் அருட்திரு தேவாகரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையப் போஷகர் நாதன், சிங்களப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் ஆரியவதி, முஸ்லிம் முன்பள்ளி ஆசிரியை பர்மிளா ஆகியோர் நிகழ்த்தினர்.

விசுவமடு - கல்லாறு கிராமத்தில் அமைந்துள்ள சாந்த முன்பள்ளி மைதானத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.



சுனாமி கடற் கொந்தளிப்பில் உயிரிழந்த முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்களுக்கான நினைவுகூரும் நிகழ்வில் சில காட்சிகள்...




## சடலங்களை அடக்கம் செய்ய 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது

சுனாமி கடற்கொந்தளிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு சடலங்களை அடக்கம் செய்வதற்குரிய உதவு தொகையான 15 ஆயிரம் ரூபா கடந்த புதன்கிழமை மருதங்கேணி வத்திராயன் தமிழ்க்கலவன் வித்தி யாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த உதவுதொகை உயிரிழந்தவர்களின் இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதன் பின்னரே வழங்கப்படுகிறது. உறவுகளின் இறப்பு தொடர்பான ஆதாரம் இல்லாதவர்கள் இந்த உதவு தொகையைப் பெறமுடியாது திரும்பிச்சென்றனர்.

இந்த உதவுதொகை ஆழியவளையில் 227 பேருக்கும், உடுத்துறையில் 95 பேருக்கும், வத்திராயன் வடக்கில் 116 பேருக்கும் வழங்கப்பட்டது. இன்னும் சில தினங்களில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளுக்கு வழங்கவுள்ளதாக கரைச்சி பிரதேச சபைத் தலைவர் தியாகராஜா தெரிவித்தார்.

பளைப்பிரதேச உதவி அரசாங்க அதிபர் பணிமனை பணியாளர் விஜயமனோகரன், கரைச்சி பிரதேச சபை கிராமிய வங்கி முகாமையாளர் மு.தர்மராஜா, பதிவாளர் தி.ஜெயநாயகம், கரைச்சி பிரதேசசபை கூட்டுறவுசபைத் தலைவர் தியாகராஜா ஆகியோர் இந்த உதவு தொகையை உரியவர்களிடம் கையளித்தனர்.

# உணவு விவசாய ஸ்தாபன பிரதிநிதிகளால் கடற்தொழில் உபகரண புனரமைப்புக்கு உதவி

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் முற்றுமுழுதாக அழிந்துள்ள வடமராட்சி கிழக்குப் பிரதேச கிராமங்களை உணவு விவசாய ஸ்தாபன பிரதிநிதிகள் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் கடற்தொழிலாளர்களின் இழப்பு, உபகரணங்கள் அழிவு மற்றும் தேவைகள் தொடர்பாக கடற்தொழிலாளர்களிடமும், சங்கப் பிரதிநிதிகளிடமும் கேட்டறிந்தனர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலய் விவசாய உணவு ஸ்தாபன நிறுவனத்தின் கடற்தொழில் நிபுணர் ஓ குல்பிரான்ட்சென், இந்த நிறுவனத்தைச் சேர்ந்த கடற்தொழில் உபகரணங்களில் நிபுணத்துவம் பெற்ற ஜீ.பயோட் ஆகியோர் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்துக்கு வருகைதந்து, சமாசப் பிரதிநிதிகளுடன் சுனாமி கடற்கொந்தளிப்பில் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர் குடும்ப விபரம், சேதமடைந்த உபகரணங்கள், தேவைப்படும் உபகரணங்கள் பற்றி கலந்துரையாடிய பின் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட கிராமங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

கடற்தொழிலாளர்களுக்குத் தேவையான புதிய படகுகள், இயந்திரங்கள், கடற்தொழில் உபகரணங்களை உள்நாட்டில் தயாரிப்பதற்கோ, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கோ மூன்று மாதங்களுக்கு மேல் செல்லலாம்.

ஆகவே, உடன் கடற்தொழில் செய்வதற்கு வசதியாக பழுதடைந்த, சேதமடைந்த படகுகளைத் திருத்துவதற்குரிய மூலப்பொருட்களையும், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துவதற்கான உதிரிப் பாகங்களை இலவசமாக உடன் தந்துதவுமாறும், இந்தத் துறை சார்ந்தவர்களுடன் தொடர்புகொண்டு திருத்தவேலைகளை உடன்செய்யும் படியும் தெரிவித்துள்ளனர்.(21)

### சேதமடைந்த படகுகள் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பில் சேதமடைந்த படகுகள், இயந்திரங்கள் என்பவற்றை முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் ஆதரவுடன், லண்டன் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய நிதியுதவியுடன் தமிழ் தகவல் ஒருங்கமைப்பு நிறுவன பணிப்பாளர்களால் புனரமைத்துக் கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருட்கள்!

கிளிநொச்சி தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்கியுள்ளது.

இந்த உதவிப் பொருட்கள் கடந்த திங்கட்கிழமை கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நடவடிக்கை செயலணிக் குழுவினரால் மருதங்கேணி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த உதவிப் பொருட்களில் குழந்தைகளுக்கான உடைகள், ஓடிகொலோன், குழந்தைகளுக்கான பவுடர், பால்மா வகைகள், பிஸ்கட், சூப்பி போத்தல்கள், மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் நுளம்பு வலைகள், சகல வயதினருக்குமான செருப்புகள், படுக்கை விரிப்புகள், சவர்க்கார வகைகள், சுடுநீர் போத்தல்கள், பெற்றோமக்ஸ், சாப்பாட்டுத் தட்டுக்கள், தேநீர் கோப்பைகள், முதலுதவி மருந்துப் பொருட்கள் என்பன உள்ளடங்குகின்றன.

## கபிலநிற தண்டுத்தத்தியின் தாக்கம்

உடையார்கட்டு குளத்தின் கீழ் உடையார்கட்டு வடக்கு, தெற்குப் பகுதி நெல்வயல்களில் கபிலநிற தண்டுத்தத்தியின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் இங்கு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் 150 ஏக்கர் வரையான வயல்கள் முற்றாக அழிவடையும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

### வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களை

# மீளக் குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான மூன்றாம் கட்ட மாநாடு- கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்றது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில், மாமுனை பிரதேசம் முதல் சுண்டிக்குளம் பிரதேசம் வரையான பகுதியை நவீன நகரமாக்குவதாகவும், இங்கு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை அமைப்பதெனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை, தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தற்காலிக வீடுகளில் குடியமர்த்துவது எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்த மாநாட்டில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த சின்னப்பா மாஸ்ரர், யாழ்.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், தமிழீழ பொருண்மிய மதியுரையக துணைப்பொறுப்பாளர் திலக், நிதித்துறையைச் சேர்ந்த தாயகன், யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் அரச, அரசசார்பற்ற திணைக்களங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தால் பாடசாலை மாணவருக்கான மருத்துவசேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு பாடசாலை மாணவர்களுக்கான விசேட மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த மருத்துவசேவை - மருத்துவ கலாநிதி இளஞ்செழிய பல்லவன் தலைமையில் இடம்பெற்று வருகிறது. இந்தச் சேவையில் மருத்துவ ஆலோசனையை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை மருத்துவ அதிகாரி தர்மேந்திரா மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பணியில் மருத்துவமனை பரிசோதகர்கள், பணியாளர்கள். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.

இந்தச் சேவைக்கான மருத்துவ உதவிகளை, உலக நோக்கமைப்பு நிறுவனமான வேல்ட் விஷன் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**பெப்ரவரி 12**

1857 : புயல் காற்றுக்கு ஒரு மையம் உண்டு என்றும், அது காற்றடிக்கும் திசையில் நகருகின்றது என்றும் கண்டுபிடித்த அமெரிக்க வானிலையாளர் வில்லியம் ரெட்ஃபீல்ட் காலமானார்.

1877 : தொலைபேசி மூலம் பத்திரிகைக்கு செய்திகளை அனுப்பும் செயல்முறை முதன் முதல் நிகழ்ந்தது. அமெரிக்காவில் அலக்ஷாண்டர் கிரகம்பெல் நிகழ்த்திய சொற்பொழிவு பற்றிய செய்தியை பொஸ்ரன் குளோப் என்ற பத்திரிகை நிருபர் தொலைபேசி மூலம் தனது பத்திரிகைக்கு அனுப்பினார்.

1902 : மோட்டார் சைக்கிளைப் பற்றிய விபரங்களைத் தெரிவிப்பதற்கென்றே லண்டனில் மோட்டார் சைக்கிளிங் என்னும் பத்திரிகை வெளிவந்தது.

1912 : சீனா குடியரசானது.

1957 : வைரத்தை விட மிகக் கடினமான போராஸான் என்ற பொருள் உருவாக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவில் அறிவிக்கப்பட்டது.

1961 : வெள்ளி கிரகத்தை ஆராய்வதற்காக ரஷ்யா வெனீரா –1 என்னும் விண்கலத்தை ஏவியது. புவியிலிருந்து 76 லட்சம் கிலோமீற்றர் தூரத்தில் இது செல்லும் போது, புவியுடனான தொடர்பை இழந்தது.

1984 : மிகப் பிரபல்யமான ஓவியர்களின் ஓவியங்களைப் போலவே 2000 இற்கும் மேற்பட்ட போலி ஓவியங்களை வரைந்து அதிக விலையில் விற்றுப் பணம் சம்பாதித்த டாம் கீட்டிங் என்பவர் காலமானார்.

தொகுப்பு - சந்துரு